In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிந்தனைக்கினிய சிவவடிவங்கள்

பூசை. ச. அருணவசந்தன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இனிய அன்புடன் .....



இந்நூல் எமது சிவசுந்தரி கலைக்கூடத்தின் சிறப்பு மலராக மலர்ந்து
அருள்மணம் பரப்புகிறது. இவ்வேளை யில் இப்பணிக்குத்
திருவருளும் குருவருளும் வழங்கி அருள்பாலித்து வரும்
திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீன குரு மகா சந்நிதானம்
சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகளையும்
நுங்கம்பாக்கம் குருஜி சிவஸ்ரீ. துரைராஜன் (எ) பத்மநாபன்
அவர்களையும்" போற்றி வணங்குகிறேன்.
மேலும், இப்பணிக்கு நல்லாதரவு தந்து வரும் எனது
அன்பிற்கினிய சிவஸ்ரீ. வ. வீரராகவன்-அனந்தலட்சுமி தம்பதியினர்க்கும்,அன்பிற்கினிய
அருட்பணி அரசு திருப்பணிச் செல்வர் சிவஸ்ரீ Er.M.V. ஜெய்சங்கர் B.E.,
இந்நூலுக்கு மேலான ஆலோசனைகளை வழங்குவதுடன் அச்சுப்படிகளைத் திருத்திச்
செம்மைப்படுத்தி உதவிவரும் அடையாறு கற்பகம் கார்டன்ஸ்
பிரம்மஸ்ரீ G.S. நடராஜன் அவர்களுக்கும்,
அவருடைய குமாரர் குமார் (எ) பாலசுப்பிரமணியம்
ஒப்புநோக்கி உதவிய திரு.த.பூமிநாதன்
களப்பணியில் உடன் வந்து படங்கள் எடுத்து உதவிய
காஞ்சிபுரம் சிவஸ்ரீ சிவா (எ) சுவாமிநாத ஸ்தபதியார்,
அவர்களுக்கும், படங்கள் தந்துதவிய சென்னை
இந்தியதொல்லியல்அறிஞர் தியாக.சத்தியமூர்த்திமூர்த்திஅவர்களுக்கும்,,
அறுபடைவீடு குகஸ்ரீ சுந்தரம் அவர்களுக்கும்,,
குடந்தை கிருஷ்ணமூர்த்திஅவர்களுக்கும்,
ஓவியர் சிவஸ்ரீ மயிலை காசிஅவர்களுக்கும்,
இந்நூல் வெளிவர முன்வெளியீட்டுத் திட்டத்திற்கு உதவி அன்பர்களுக்கும்
எனது நன்றியை மீண்டும் மீண்டும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.
அன்பர்கள் அனைவருக்கும் உண்ணாமுலை அம்பிகை உடனாய
அண்ணாமலை அண்ணல், சகல செல்வ யோகமிக்க
பெருவாழ்வை அளித்தருள வேண்டுமென்று
அவருடைய பொன்னார் திருவடிகளைப்
போற்றிப் பணிந்து வணங்குகின்றேன்.

இங்ஙனம்,

சர்வஜித்து ஆண்டு மகாசிவராத்திரி,
மாசி 23ஆம் நாள்(6-3-2008) வியாழக் கிழமை

பூசை. ச. அருணவசந்தன்
(எ) பூசை.ச. ஆட்சிலிங்கம்

சிவசுந்தரி கலைக்கூடம்,
29, பீமண்ண முதலி கார்டன் தெரு, ஆழ்வார்பேட்டை,
சென்னை-18

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிந்தனைக்கு இனிய சிவவடிவங்கள்

அறிமுகம்

இறைவன் உலகைப் படைத்து, காத்து, அழித்து, மறைத்து, அருளி அலகிலா விளையாட்டை ஓயாது ஆடிக்கொண்டேயிருக்கின்றான்,உயர்நிலை பெற்ற உயிர்கள் அவனை எப்பொழுதும் நினைத்துக் கொண்டே இருக்கின்றன,அவற்றின் முயற்சிக்கேற்ப அவன் வெளிப்பட்டு அவற்றிற்கு அருள்புரிகிறான்.அவ்வேளையில் எளிவந்தவான் கருணை கொண்டு அவ்வவ்வுயிர்களின் பக்குவத்திற்கேற்ப உருவம் புனைந்து வந்து அருள்புரிகிறான்.அவ்வாறு அவன் கொண்ட கோலங்கள் ,எண்ணமுடியாதன. அவை கணக்கிலா கோலங்கள் என்று மாணிக்கவாசகரால் போற்றப்பட்டுள்ளன.

மாணிக்க வாசகருக்குக் குருவடிவாக வந்து அருளிய அவனே மதுரையில் பெண்பன்றியாக வந்து தாயை இழந்த பன்றிக் குட்டிகளுக்குப் பாலூட்டினான். திரிபுராதிகளுக்கு முன்பாக பெரும்போர் வீரனாகத் தோன்றி வீரட்டகாசம் புரிந்த அவனே திருச்சியில் தன் பக்தையின் பெண்ணிற்குப் பிரசவம் பார்க்கப் பெண்வடிவில் சென்றான்.

மகாராஜாவாக வீற்றிருந்து பாண்டிய மண்டலத்தில் நாடாண்ட அவனே பல ஊர் திரியும் சித்தனாகத் தோன்றினான். மண்மீது வந்து வைகையில் மண் சுமந்து பாண்டியனிடம் பிரம்படியும் பட்டான்.

இவ்வாறு அவன் கொண்ட கோலங்களைச் சொல்லிக் கொண்டே போகலாம். இத்தகைய அருள் வடிவங்கள் ஆகமங்களாலும் சிற்ப நூல்களாலும் வரையறுக்கப்படாதவை. கலைஞர்களின் கற்பனை ஊற்றில் குளித்துக் கண்ணுக்கு இனிமைதர உருவானவை. கருவறையில் மூர்த்தங்களாக இல்லாமல் தூண் சிற்பங்களாகவும் சுவர்ச் சிற்பங்களாகவும் திரும்பத் திரும்ப பல இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

அம்பிகை லிங்கத்தைத் தழுவிக் கொள்ளுதல், மீன்மீது யோகேசுவரனாக வீற்றிருத்தல், இராவணன் மலையைத் தூக்க ,அதன் மீது பார்வதி பரமேசுவரர் அமர்ந்திருத்தல், வாலி சிவபூசை செய்தல் முதலியவை இவற்றில் சில குறிப்பிடத்தக்கவையாகும்.

அம்பிகை காஞ்சியில் மாமரத்தடியில் சிவலிங்கத்தைத் தழுவிக் கொள்ளுதல் தமிழகக் கோயில்களில் ஆயிரக்கணக்கான இடங்களில் உள்ளன. சித்தீசர், மச்ச யோகேந்திரர் முதலான சிவவடிவங்கள் சிவாலயங்கள் மட்டுமின்றி அங்காளம்மன், செல்லி யம்மன் முதலிய ஆலயங்களிலும் இடம் பெற்றுள்ளன. இவற்றில் சிலவற்றைச் சிந்தனைக் கினிய சிவ வடிவங்கள் என்ற நூலாக வெளியிட்டு மகிழ்கிறோம்.

இதில் புராண வரலாறு, அதன் மூல நூல்கள், சிற்பங்களில் உள்ள நுணுக்கம்,கலைஞனின் கண்ணோட்டம் முதலியவை இயன்ற வரையில் எடுத்துக்கூறப்பட்டுள்ளன.

இவற்றை அறிந்து இதயத்தில் இருத்தி சிவபெருமானின் செவ்விய அன்பெனும் தேன் பருகி இன்பத்தில் திளைத்திருக்க வேண்டுகிறோம்.

–சிவசுந்தரி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிறந்த அடியார் சிந்தனையில் தேனூற நின்றபெருமான்

சிந்திப்பாரவர் சிந்தையுள்ளானை என்று சுந்தரரும், " சிறந்த அடியார் சிந்தனையில் தேனூறி நின்று பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான் கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தம் கருத்தின் நோக்கரிய நோக்கே என்று மாணிக்கவாசகரும் அருளிய தொடர்களின் மூலம் சிந்தித்து வழிபடும் அடியவர்களின் சிந்தனையில் சிவபெருமான் தோன்றுகின்றான் என்பதை அறியலாம்.

பெருமானை அரசனாகவும் தன்னை அவனுக்குச் சேவகனாகவும் சிந்திக்கும் அடியவர்களுக்குச் சிவபெருமான் பேரரசனாகக் காட்சியளிக்கிறான். தான் சீடனாகவும் தன்னை ஆட்கொள்ள வந்த குருவாகப் பெருமானையும் நினைப்பவர்களுக்குப் பெருமான் குருவாக வந்தருள்புரிகின்றான். ஓருருவம் ஒரு நாமம் இல்லாத

இறைவன் அன்பர் தம்மைச் சிந்தித்து மகிழ்வதற்கேற்ப, தான் கோலம் கொண்டு வந்து அருள்பாலிக்கின்றான்.

நமது சிந்தனையில் பிறக்கும் வடிவமே நாம் சிவபெருமானின் காட்சியைப் பெறத் துணை நிற்கிறது. அதையொட்டி இந்நூலுக்குச் சிந்தனைக்கினிய சிவவடிவங்கள் என்ற பெயரைச் சூட்டியுள்ளோம். சிந்தனையின் சிவனை ஆராதித்து அதை நடைமுறையில் கண்டு மகிழ்ந்து பேரின்பத்தில் திளைக்க வேண்டுகிறோம்.

இந்நூல் வெளிவரும் வேளையில் அன்பர்களுக்கு மற்றோர் செய்தியையும் தெரிவிக்க விரும்புகிறோம். நமது சமயம் காலம் கடந்தது இந்த நெடிய காலத்துள் எத்தனையோ வரலாறுகள் நடைபெற்றுள்ளன. அவற்றில் சில காலத்தை வென்றுள்ளன. சில காலவெள்ளத்தில் கரைந்துவிட்டன. சில தன்னிலை மாறி வேறு வடிவம் கொண்டுவிட்டன. எனவே, இதுதான் உறுதியானது, சரியானது என்று கூற இயலாத நிலையுள்ளது.

எடுத்துக்காட்டாக திருவீழிமிழலையில் செண்டேந்திய செல்வனாக விளங்கும் பெருமானை இப்போது கல்யாணசுந்தரர் என்றும் மாப்பிளைசாமி என்றும் கொண்டா டுகிறோம். சில அன்பர்கள் அவரை முல்லை நிலத்துக் காவலன் என்று கருதுகின்றனர். இவ்வாறே காட்சி கொடுத்த நாயகரை மருதநிலத் தலைவனாகக் காண்கின்றனர். பெருமான் எல்லோருக்கும் அவரவர் சிந்தனைக்கேற்ப அருள்பாலிக்கின்றான். எனவே, பல்வேறு அடியவர்களின் சிந்தனைகளின் தொகுப்பாகவே இந்நூலை ஆக்கியுள்ளோம்.

இவற்றைக் கண்டு மகிழ்வதுடன் தங்களின் கருத்துக்களை எங்களுக்குத் தெரிவிக்க வேண்டுகிறோம். ❀

சிந்தனைக்கினிய திருமால்

திருமாலுக்குச் சிந்தனைக்கினியான் என்ற பெயர் வழங்குகிறது. திருமங்கையாழ்வார் ஆராதித்து வந்த பெருமாளுக்குச் சிந்தனைக்கினியான் என்று பெயர். சீர்காழியை அடுத்துள்ள திருஆலி என்னும் திவ்விய தேசத்தில் திருமங்கையாழ்வார் சந்நிதியில் அவருக்கு அருகில் சிந்தனைக்கினியானான திருமால் உள்ளார். ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

பூத நாயகனே போற்றி! பூதங்கள்தோரும் நின்றாய் போற்றி! போற்றி!!



தழுவக் குழைந்த பிரான்

தழுவுதல் என்பது கட்டி அணைப்பது ஆகும். ஒருவரை ஒருவர் கட்டித் தழுவுதல் அன்பின் வெளிப்பாடு. தாய் குழந்தையைத் தழுவி மகிழ்கிறாள். காதலன் காதலியைத் தழுவி மகிழ்கிறான். இதனை இலக்கியங்கள் மெய் தீண்டும் இன்பம் என்று கூறுகின்றன. அந்த இன்பத்தால் மனமும் உடலும் நெகிழ்ந்து உருகி மகிழ்ச்சியில் கரைந்து விடுகின்றன.

சகோதரர்கள் ஒருவரை ஒருவர் தழுவி மகிழ்கின்றனர். இராமன் தம்பி என்று கூறி, குகனையும், விபீஷணனையும் கட்டி அணைந்து மகிழ்ந்ததை இராமாயணம் கூறுகிறது. நெடு நாட்கள் கழித்து வந்த தம்பி கும்பகர்ணனை இராவணன் எதிர்கொண்டழைத்துத் தழுவிக் கொண்டதைக் கூறும் கம்பர் இரண்டு மலைகள் நீண்ட நெடிய காலுடன் சென்று தழுவிக் கொண்டதுபோல்இருக்கிறதென்று உவமிக்கின்றார்.

பறவைகள் தம் குஞ்சுகளை இறக்கையால் தழுவிக் கொள்கின்றன. வீரர்கள் வீரம் கொண்டு பாய்ந்து வரும் காளைகளை அடக்குவதைக் கூட இலக்கியங்கள் ஏறுதழுவுதல் என்று புகழ்கின்றன.

சமய வரலாற்றில் நிகழ்ந்த ஒரு தழுவல் காட்சி அன்பர்களின் மனதை விட்டு அகலாது சிற்பமாகவும், ஓவியமாகவும் கணக்கில் அடங் காத அளவுக்கு ஆக்கப்பட்டுள்ளது. எண்ணற்ற ஆலயங்களில் அக்காட்சியைச் சுவர்கள், கோபு ரங்கள், தூண்கள் ஆகியவற்றில் திரும்பத் திரும் பக் காணமுடிகிறது.

அந்த அற்புதக் காட்சி கம்பையாற்றங் கரையில் உமையம்மை சிவலிங்க வடிவமான சிவபெருமானைத் தழுவியிருப்பதாகும். அந்த வரலாற்றை இங்குக் காணலாம்.

கயிலை மலை மீது பொன் மண்டபத்தில் அமர்ந்து சிவபெருமானும் உமாதேவியும் உரை யாடிக் கொண்டிருந்தனர். சிவபெருமான் ஆகமத்தின் நுண்பொருளை அவளுக்கு விரிவா கக் கூறினார்.

அப்போது அம்பிகையிடம் சிவ பெரு மான், "நான் கூறியுள்ள ஆகமங்களின்படி என்னை அர்ச்சனை புரிவதையே உண்மை யான நான் விரும்பும் பூசையாக ஏற்றுக் கொள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ளுகிறேன்' என்றார். அதைக்கேட்ட உமாதேவி, பூமிக்குச் சென்று "உம்மை ஆகமப்படியே அர்ச்சித்து மகிழ என் உள்ளம் விரும்புகிறதென் றாள். சிவபெருமான் அப்படியே ஆகட் டும்' என்றார்.

அதன்படியே அவள் பூமிக்கு வந்தாள். காஞ்சிபுரத்திற்கு வந்தபோது பதுமன் என்ற மகா நாகன் அவளைப் பணிந்தான். அன்னையே நான் வசிக்கும் பெரும் பிலத்தைத் தாங்கள் இடமாகக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டான்.

அதன்படியே அம்பிகை அவனி டத்தில் சென்று தங்கினாள். (பிலம் - பூமிக் கடியில் உள்ள குகை போன்ற இடம்) பிறகு கம்பை யாற்றங்கரையில் பெருமானை நினைந்து பூசையைத் தொடங்கினாள். மாமரத்தடியில் ஒற்றைக் காலில் நின்று தவம் புரிந்தாள். சிவபெருமான் அவள் கண்டு மகிழும்படியாக மாவடியில் சிவலிங்கமாகத் தோன்றினார்.

தினமும் உமையம்மை தான் அமைத்த நந்த வனத்திற்குச் சேடியருடன் சென்று பூக்களைப் பறித்துக் கூடைகளில் நிரப்பிக் கொண்டு வந்தாள். கம்பையாற்றிலிருந்து தூயநீரை எடுத்து வந்தாள். ஆகமங்கள் கூறியபடி மிகுந்த அன்புடன் பெருமானுக்குத் திருமஞ்சனம் செய்தாள். மலர்களை மாலையாக்கிச் சூட்டினாள். நெய் விளக்குகளை ஏற்றி தூப தீபங்களால் வழிபட் டாள்.

நாள்தோறும் அவளுடைய அன்பும் அவள் செய்யும் பூசையின் சிறப்பும் மேலும்மேலும் பெருகின. நாட்கள் பல கழிந்தன.

ஒருநாள், சிவபெருமான் திருவிளை யாடல் புரியக் கருதி அவள் பூசை செய்யும் வேளையில், கடல் ஏழும் பொங்கி ஒன்றாக வருவதுபோல கம்பையாற்றைப் பெருகச் செய்தார். பொங்கி வரும் வெள்ளத்தைக் கண்ட தேவியார், தாம் வணங்கி வரும் சிவலிங்கத்தைத் தாவி அணைத் துக் கொண்டாள். பொங்கி வரும் வெள்ளம் மேலும் பெருகக் கண்டு அஞ்சி சிவலிங்கத்தை இன்னும் இறுக்கமாகத் தழுவினாள். தம் காதலியான உமாதேவி தழுவியதால் சிவபெரு மான் தன் மேனியைக் குழைத்து அவளுடைய மெல்லிய முலைகளுக்கும் கைகளுக்கும் மென் மையாக மெத்தென இருக்கும்படி ஆனார். அதனால் அவை அவள் மேனியில் பதிந்து தழும்பை உண்டாக்கின.

இலங்கையில் விளங்கும் ஏகம்பன்

இலங்கையிலுள்ள பல தலங்களில் உள்ள அம்பிகை சிவலிங்கத்தைத் தழுவிக் கொண் டுள்ள காட்சி இராவணன் கயிலை மலை யைத் தூக்கும் காட்சியுடன் தொடர்புபடுத்தி அமைக் கப்பட்டுள்ளது. கம்பம் என்பதற்கு தூண் என்ப துடன் நடுக்கம் என்பதும் பொருள். குபேரனை வென்று வெற்றிக் களிப்புடன் இலங்கைக்குத் திரும்பிக் கொண்டிருந்த இராவணன் தன் வழி யைத் தடுத்து நின்ற கயிலை மலையை எடுத்து அப்பால் வைக்க விரும்பி, அதை வேருடன் பெயர்த்தெடுத்தான். அதனால் கயிலை மலை மீதிருந்த எல்லோரும் நிலை தடுமாறி வீழ்ந் தனர். லிங்கத்தைப் பூசித்துக் கொண்டிருந்த அம்பிகை அச்சம் அடைந்து, தாம் பூசிக் கொண்டிருந்த சிவலிங்கத்தை அணைத்துக் கொண் டாள். பெருமான் வெளிப்பட்டு வலது கால்கட்டை விரலை ஊன்றி இராவணனை மலையோடு சேர்த்து அழுத்தி னார். அவன் மலையின் கீழ் அகப்பட்டு விடுபட முடியாதுஅழுதான். அவன் ஒருவாறு தேறி சாமகானம் பாடஅதைக் கேட்டு உவந்த பெருமான் அவனக்கு வரங்கள் தந்து அருள் புரிந்தார்.

இதில் இராவணன் கயிலை மலையைத் தூக்கிக் கொண்டிருக்கின்றான். மலை மீது மரத்தடியில் அம்பிகை லிங்கத்தைத் தழுவிக் கொண்டிருக்கிறாள். லிங்கத்திற்கு ஐந்து தலைப் பாம்பு குடை பிடித்துக் கொண்டிருக்கிறது.

இலங்கையில் பல இடங்களில் இக்காட் சியைக் காண்கிறோம். இக்காட்சியை நாக பூஷணி அம்மன் வரலாற்றுடன் தொடர்பு படுத் தியுள்ளனர். இது நாகபூஷணி அம்மன் என்று கொண்டாடப்படுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



In Public domain. Digitization Muthulakshmi Research Academy



அம்பிகை தழுவும் வேளையில் லிங்கம் வளைந்து கொடுப்பதைக் காட்டும் தூண் சிற்பம் இதில் பின்னணியில் தோழியரும் முன்னணியில் பூஜா பொருட்களும் உள்ளன காஞ்சிபுரம் - ஏகாம்பரநாதர் ஆலயம்

பெருமான் சிவலிங்கத்திலிருந்து வெளிப்பட்டார். உமையே! உமக்கு வேண்டிய வரங்களைக் கேள் என்றார். அம்பிகை அவரை வணங்கி கரங்களைக் கூப்பி, ஐயனே! எனது பூசை இன்னும் முடியவில்லையே அதை நிறைவு படுத்துகிறேன்" என்றார்.

இறைவன் சிரித்துக் கொண்டே அம்பிகையே உனது பூசை என்பால் எப்போதும் முடிவதில்லை என்றார். அம்பிகை ஐயனே இங்கு அனைத்து அறங்களையும் (தர்மங்களையும்) நான் செய்ய வேண்டும். இங்குள்ளவர்களுக்குத் தாங்கள் அருள்புரிந்து பெரும்பேற்றினை வழங்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டாள். இறைவன் அப்படியே ஆகட்டும் என்றார்.

மண்மேல் வந்து சிவபூசை செய்து மேன்மை பெற்ற உமாதேவியருக்கு அவள் இல்ல றத்தின் பயனான இடையறாத தர்மத்தைச் செய்வதற்காகப் பெருமான் இரண்டு நாழிகை நெல்லை அளித்தார். அதைப் பெற்றுக் கொண்ட உமாதேவியார் உலகாணி தீர்த்தத் தின் கரையில் காமகோட்டம் என்னும் மாளிகையை அமைத்தாள்.

அங்கிருந்தவாறே ஐயன் அளந்தபடி இரு நாழிகை நெல்லைப் பெருக்கி முப்பத்து இரண்டு அறங்களையும் வளர்த்தாள். அந்தக் காமகோட்டமே இந்நாளைய காமாட்சியம்மன் ஆலயமாகும். (அவள் வசித்த பிலமே இங்கு அம்பிகையின் முன்பாக மூடப்பட்டுள்ள சக்கரம் அமைத்த தொட்டி போன்ற அமைப்பாகும்.)

காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் ஆலயத்தில் நடைபெறும் பங்குனி உத்திரகல்யாணப் பெருந் திருவிழாவின்போது, அம்பிகை நீராடல், கம்பை தீர்த்தக் கரையில் தவம்புரிதல், சிவபூசை செய்தல், பெருமான் இடப வாகனத் தில் காட்சி கொடுத்தல் பின்பு திருமண விழா நடை பெறுதல் முதலியன சிறப்பாக நடத்தப்படுகின்றன.

உமையம்மைச் சிவபெருமானைத் தழுவி நிற்கும் இந்தக் காட்சி மக்களால் பெரிதும் கொண்டாடப்படுகிறது. காஞ்சிபுரத்திலுள்ள அனைத்து ஆலயங்களிலும் முகப்புச் சிற்பமாகவோ தூண் சிற்பமாகவோ சுவர் சிற்பமாக வோ இது இடம் பெற்றுள்ளது.

தொண்டை நாட்டிலுள்ள அநேக ஆலயங்களில் அம்பிகை சிவலிங்கத்தை அணைத்துக் கொண்டுள்ள காட்சி தூண் சிற்பமாக உள்ளது.

நவராத்திரி விழாவின் இறுதிநாளில் இந்தக் காட்சி அலங்காரமாகச் செய்யப்படுகிறது. இதை கம்பாநதிக் காட்சி (அ) மாவடிச் சேவை என அழைப்பர். அங்காளம்மன், மாரியம்மன், செல்லியம்மன் ஆலயங்களிலும்கூட இந்த அலங்காரம் சிறப்புடன் நடைபெறுகிறது.

காஞ்சிபுரம் ஏகாம்பர நாதர் ஆலயத்தில் மூலவரான ஏகாம்பர நாதர் திருமேனியைத் தழுவிக் கொண்டிருப் பதுபோல் உள்ள அம்பிகையின் உருவம் சிறப்பு நாட்களில் ஏகம்பருடன் வைக்கப்படுகிறது.

காஞ்சிபுரத்திலும் சுற்று வட்டாரத் திலும் சைவ அன்பர்கள் தங்கள் வீட்டுத் திருமண அழைப்பி தழ்களில் இப்படத் தை அச்சிடுகின்றனர்.

இக்காட்சியில் மாமரம் நிற்க, அதன் கீழ் அம்பிகை ஆரத்தழுவியவாறுஅமர்ந்துள் ளாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவலிங்கம் அணி மணிகளா லும் மலர் மாலைகளா லும் அலங்கரிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னணியில் மகாபத்மன் என்னும் பாம்பு உள்ளது.

அம்பிகை தவம் செய்யும் போது, சிவபெரு மானை ஆரத்தழுவிக் கொண்ட நிகழ்ச்சி திருச்சத்தி முற்றம் என்ற தலத்திலும் நிகழ்ந் துள்ளது. அங்குத் தனிச் சந்நிதியில் உமையம்மை லிங்கத்தைத் தழுவி அணைத் துக் கொண்டுள்ள கோலம், பெரிய திருவுருவமாக நிலைப்படுத்தப்பட்டுள்ளது. இந்தச் சந்நிதி பிரார்த்தனைத் தலமாக உள்ளது. பட்டீச்சுரத்தின் ஓர் அங்கமாகச் சக்தி முற்றம் ஆலயம் உள்ளது.

இதேபோன்ற சிறிய அளவிலான சக்தி தழுவி நிற்கும் சிற்பத்தைத் திருவலஞ்சுழியிலும் காண் கிறோம்.

அம்பிகை ஆரத் தழுவிய போது சிவபெருமா னின் திருமேனி நெகிழ்ந்து கனிந்து குழைந் ததாம். அதனால் அம்பிகை இறுகத் தழுவிய போது அவளு டைய முலைகளும், வளையல்களும் அவர் திரு மேனியில் பதிந்து (தழும்பு) வடுவை உண்டாக்கி விட்டன. அதை யொட்டி ஏகாம்பரநாதரை முலைத் தழும்பர் என்றும் இலக்கியங்கள் கூறு கின் றன. தழு வும் போது குழைந்து இளகியதால் பெருமான் தழுவக் குழைந்த நாதர் என்றும் அழைக்கப்படுகிறார். ❀



மாவடியில் மார்புற அம்பிகை லிங்கத்தைத் தழுவுதல் தூண் சிற்பம்

கம்பா நதிச் காட்சியலங்காரம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கச்சி ஏகம்பர்



அருள்மிகு ஏகாம்பரநாதர் - காஞ்சிபுரம்

காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் ஆலயத்தில் கருவறையில் பெரிய வட்டமாக ஆவுடையார் மீது நீண்ட உருத்திரபாகத்துடன் ஏகம்பர் காட்சியளிக்கிறார். இந்த ருத்திரபாகம் மண்ணால் ஆனதென்றும் அம்பிகை யின் முலைகளும் வளைகளும் அழுந்தியதால் உண்டான அடையாளங்களைக் கொண்டுள்ளதென்றும் கூறுகின்றனர். இவருக்கு அபிஷேகம் செய்யப்படு வதில்லை. புனுகுச் சட்டம் மட்டுமே அணிவிக்கப்படுகிறது. சுவர்ண பந்தனம் செய்யப்பட்டுள் ளது.

குடமுழுக்கு விழாவின்போது இவருக்கு அஷ்டகந்தம் அணிவிக்கப்படுகிறது. சிறப்பு நாட்களிலும் திங்கட் கிழமை மாலை வேளைப் பூசைகளிலும் அம்பிகை தழுவிக் கொள்ளும்கோலத்திலானகவசம் அணிவிக் கப்படுகிறது.

ஏகாம்பர லிங்கத்தின் பின்னணியில் இத் தலத்திற்கே உரிய சோமாஸ்கந்தர் உருவம் அமைந்துள்ளது. வெள்ளிக்கவசம் அணிவிக்கப்பட்டு மிகவும் பொலிவுடன் காட்சியளிக் கிறது. இதில் பெருமானுடன் தேவியும் ஸ்கந்தரும் உள்ளனர். இந்த மூர்த்திக்கு அஷ்ட கந்தம் மட்டுமே அணிவிக்கப் படும்.தைலமும் அவ்வப் போது சாத்துகின்றனர்.

கருவறைக்குப் பின்னர்அழகிய சுற்று மதிலுக்குள் மாமரம் உள்ளது. பழைய மரம் பட்டுப் போய் விட அதன் மூலத்திலிருந்து இப்போதுள்ள மரம் முளைத்து வந்து ள்ளது. பழைய மரத்தின் வயது 5000 ஆண்டுகளுக்கும் அதிகமான தென்று கூறியுள் ளனர். இதன் கீழ் யோக, போகேசு வரராகச் சோமாஸ்கந்த மூர்த்தி கல் திருமேனியாக வீற்றிருக்கின்றார். திருமணம் இனிமையாகவும் விரைவாகவும் நடைபெற இவர் சந்நிதியில் பிரார்த் தனை செய்து கொள்ளுகின்றனர். இங்குத் திருமணங்களும் நடத்தப்படுகின் றன.

இக்கோயிலில் அநேக இடங்களில் அம்பிகை சிவலிங்கத்தை அணைத்துக் கொண்டிருக்கும் காட்சி புடைப்புச் சிற்பமாகவும் சுதைச் சிற்பங்களாகவும் அமைக் கப்பட்டுள்ளன. ❀

❀ ஏகாம்பரநாதர் ஆலயத்தில் கருவறையைச் சுற்றிச் சிறிய மண்டபங்களில் கள்ளக்கம்பர், வெள்ளக் கம்பர், நல்லக்கம்பர் என்ற பெயரில் சிவலிங்கங்கள் அமைந்துள்ளன. இச்சிவலிங்கங்கள், அம்பிகை பூசை செய்யும் வேளையில் பெருமான் மறைந்து நின்று (கள்ளமாக) பார்த்து மகிழ்ந்தது கள்ளக்கம்பராகவும், வெள்ளத்தைப் பெருகச்செய்தபோது, வெள்ளக் கம்பராகவும், அவளுக்கு அருள்புரிந்தபோது நல்லக் கம்பராகவும் விளங்கியதைக் குறிக்கின்றன. இவற்றை முறையே திருமாலும், பிரமனும், உருத்திரனும் வழிபட்டுப் பேறு பெற்றுள்ளனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கண் கொடுத்த வனிதை

ஏலவார்குழலியான அன்னை காமாட்சிக்குக் "கண் கொடுத்த வனிதை' என்றும் பெயர் வழங்குகிறது.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திரு ஒற்றியூரில் சங்கிலி நாச்சியாரை மணந்து கொள்ளும் போது, அவரிடம் உன்னைப் பிரியேன் என்று கூறிச் சத்தியம் செய்து மணம் செய்து கொண்டார். அவரால் திருவாரூரையும் தியாகேசப்பெருமானையும் விட்டுப் பிரிந்திருக்க முடியவில்லை. சங்கிலியாரோ திருஒற்றியூரை விட்டு வெளியே செல்வதில்லை என்ற உறுதி பூண்டிருந்தார். அதனால் சுந்தரர் தாம் செய்த சத்தியத்தை மீறி அவளைப் பிரிந்து திருவாரூரை நோக்கிப் பயணமானார்.

சத்தியத்தை மீறியதால் திருஒற்றியூரைத் தாண்டியதுமே அவருடைய கண்ணொளி மறைந்து. குருடனானார்இருந்தாலும் தனது பயணத்தைத் தொடர்ந்தார். திருமுல்லை வாயிலை அடைந்து பரஞ்சுடரான பாசுபதராம் சிவபெருமானிடம் தம் துயரத்தை மாற்றுமாறு வேண்டினார். இறைவன் ஏதும் பேசாதிருந்தார்.

சுந்தரர் வருந்தி, பயணத்தைத் தொடர்ந்து வெண்பாக்கம் என்ற ஊரை அடைந்தார். அங்குள்ள பெருமானிடம், தாம் வந்திருப்பதை உரைத்தார். சிவபெருமானோ " ஆம் இருக்கிறோம். நீங்கள் போகலாம்' என்றார். அதைக் கேட்டு சுந்தரர் வருந்திப்பாடினார். சிவபெருமான் அவருக்கு ஊன்று கோலை அளித்தார். அதைப் பெற்றுக்கொண்டு வழி நடந்து அவர் காஞ்சிபுரத்தை அடைந்தார்.

ஏகாம்பரேசுவரரை வணங்கித் தன் துயரை எடுத்துக் கூறினார். இறைவன் அப்போதும் ஏதும் கூறாதிருந்தார். அம்பிகைக்கு அவர் மீது இரக் கம் உண்டானது. உடலில் தனது பாகமான இடது கண்ணில் பார்வை வரும்படிச் செய்தார்.

அந்த அருளை வியந்து சுந்தரர் நன்றியுடன் ஒவ்வொரு பாடலிலும் அவள் சிவபூசை செய்து பேறு பெற்றதைக் கூறிப் போற்றினார்.

ஏலவார் குழலால் உமை நங்கை என்றும்
ஏத்தி வழிபட்ட;
அற்றமில் புகழாள் உமை நங்கை
ஆதரித்து வழிபட்ட:

ஏலவார் குழலி - காஞ்சிபுரம்

வரிகொள் வெள் வளையான் உமை நங்கை
மருவி ஏத்தி வழிபட
கெண்டை; அம் கண் உமை நங்கை;
கெழுமி ஏத்தி வழிபட்ட:
எல்லையில் புகழாள் உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபட்ட
மங்கை நங்கை மலைமகள் கண்டு
மருவி ஏத்தி வழிபட்ட:
எண்ணில் தொல்புகழாள் உமை நங்கை என்றும்
ஏத்தி வழிபட்ட,
அந்தமில் புகழாள் உமை நங்கை
ஆதரித்து வழிபட்ட,
பரந்த தொல்புகழாள் உமைநங்கை பரவிஏத்தி
வழிபடப்பெற்ற;

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்று ஒன்பது பாடல்களில் கூறி, அவளு டைய பெருமைகளை விரித்து, அவளால் வழி படப்பட்ட இறைவன் என்று பாடினார்,

பத்தாவது பாடலில் முழு வரலாற்றையும் விளக்கி எள்கல் இன்றி இமையவர்கோனை ஈசனை வழிபாடு செய்வாள் போல் உள்ளத்துள்கி உகந்து உமை நங்கை வழிபடச் சென்று வெள் ளங்காட்டி வெருட்டிட அஞ்சி வெருவி ஓடித் தழுவ வெளிப்பட்ட கள்ளக்கம்பன்" என்று கூறுகிறார்.

கண்கொடுத்த பெண்ணாதலின் அவளைக் "கண் கொடுத்த வனிதை' என்று அழைக் கின்றனர். இந்நாளி லும் " " ஆலந்தான் உகந்து' என்று தொடங்கும் சுந்தரரின் தேவாரத்தைப் பாராயணம் செய்தால் கண் சம்பந்தமான தொல்லைகள் விலகுவதுடன் அம்பிகையின் அருள் பூரணமாகக் கிடைக்கும் என்பது உறுதி.

திருவாரூருக்கு அருகில் கண் கொடுத்த வனிதம் என்ற பெயரில் ஓர் ஊர் உள்ளது. அங்குள்ள பெரிய சிவாலயத்தில் வீற்றிருக்கும் சிவபெருமான் நயனவரதேசுவரர் (கண்கொடுத்த வள்ளல்) என்று அழைக்கப்படுகிறார். ❀

கண் கொடுத்த பனங்காடன்

தேவாரப் பாடல் பெற்ற திருத்தலங்களில் பனங்காட்டூர் என்ற பெயரில் இரண்டு தலங் கள் இருக்கின்றன. ஒன்று காஞ்சிபுரத்திற்கு அருகி லும், மற்றது விக்கிரவாண்டிக்கு அருகிலும் உள்ளன. இவற்றை இனம் பிரித்துக்காட்ட காஞ்சி புரத்திற்கு அருகிலுள்ள பனங்காட்டூரை வன்பார்த்தான் பனங்காட்டூர் என்றும், விக்கிர வாண்டிக்கு அருகிலுள்ள தலத்தைப் புறவார் பனங்காட்டூர் என்றும் அழைக்கின்றனர்.

இரண்டுமே கண்ணொளி வழங்கிய திருத் தலங்களாகும். புறவார் பனங்காட்டூர் இந்நாளில் பனையபுரம் என்றழைக்கப்படுகிறது. சென்னை யிலிருந்து கும்பகோணம் செல்லும் சாலையில் விக்கிரவாண்டிக்கு அடுத்துப் பனையபுரம் உள்ளது. இங்குச் சாலையோரத்திலேயே ஆலயம் அமைந்துள்ளது. பகன் என்ற சூரியன் வழிபட் டுக் கண்ணொளி பெற்ற தலம்.

தட்சன் சிவபெருமானை மதியாது செய்த யாகத்தில் கலந்து கொண்ட பகனின் கண்களை வீரபத்திரர் பறித்தார். கண்ணிழந்து துன்புற்ற அவன், இங்கு வழிபட்டுப் பேறு பெற்றான். மேலும், சிபி எனும் மன்னனுக்கும் பெருமான் கண்ணொளி வழங்கினார் என்று தலபுராணம் கூறுகிறது. இதையொட்டிப் பெருமான் நேத்தி ரோத்தாரகர் என்று அழைக்கப்படுகிறார். (இதற்கு மீண்டும் கண் கொடுத்த பிரான்) என்பது பொருள்.

மற்றோர் தலமாகப் பார்த்தான் பனங் காட்டூர் காஞ்சிபுரத்திலிருந்து செய்யாறு செல்லும் வழியில் பனங்காட்டூர் கூட்டுப் பாதை யிலிருந்து வடக்கே 2 கி.மீ, தொலைவில் உள்ளது. அண்மைக் காலத்தே வாழ்ந்து இந்த ஆலயத்தில் பணி செய்து வந்த அடியவரான நாராயண ஐயர் அவர்களின் மகனுக்குக் கண் கொடுத்துள்ளார்.

ஸ்ரீ நாராயண ஐயர் அவர்களின் மகள் பர்வதராஜனுக்கு இமையிறக்கம் என்ற நோய் உண்டாகி இரண்டு கண்களும் மூடப்பட்டு பார்வை போனது. ஐயரவர்கள் பெருமானைத் துதித்து பாடல்களைப் பாடி வந்தார். ஐந்து நாட்கள் சென்ற பின் தெருவழியே சென்ற ஒரு சித்தன் ஆமையோட்டைத் தேய்த்து சூட்டு டனேயே பழுதுற்ற கண்களின் மீது பூசிவிட்டுச் சென்றான். கண்ணொளி மீண்டும் கிடைத் தது.

கண்ளொளி பெற்ற பர்வதராஜன் பின்னா ளில் பாடியதே திருவன் பார்த்தான் பனங்காட் டூர் தாளபுரீசுவரர் வெண்பா அந்தாதி. அதில் பல பாடல்களில் தாம் கண்ணொளி பெற்ற தைக் குறித்துள்ளார். இதனை ஈண்டிய அன்பரானார் எந்தை நாராயணன் வேண்டி நின்றார். பனங்கா டரை ஆண்டவன் ஈந்தனன் என்னிரு கண்களும் ஏழையேன் என்று குறித்துள்ளார். ❀

❀ வலது கண் நலம் பெற மீளா அடிமை என்ற பதிகத்தையும், இடக்கண் நலம் பெற ஆளந்தான் உகந்து என்ற பதிகத்தையும் பாராயணம் செய்ய வேண்டும். இவை இரண்டும் சுந்தரரால் அருளப் பெற்றவைகளாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அச்சம் கொண்டு உமையம்மை சிவபெருமானைத் தாவி அணைத்துக்கொண்டு அருள்பெற்ற நிகழ்ச்சியை முன்னர் கண்டோம். இப்போது உமையம்மை மனம் மகிழுமாறு சிவபெருமான் அன்புகொண்டு அவளை அணைத்தருளி அருள்புரிந்த வரலாற்றைக் காணலாம். இத்தகைய வடிவம் தழுவிய மகாதேவர் என்றும், அணைத்து எழுந்த பிரான் என்றும், பல வாறாகக் அழைக்கப்படுகின்றன.

அணைத்தெழுந்த பிரான்

சிவபெருமான் அம்பிகையைத் திருமணம் செய்து அணைத்துக் கொண்டு நிற்கும் கோலமே அணைத்தெழுந்த பிரான் என்று அழைக்கப்படுகிறது.

ஒரு சமயம் சிவபெருமானும் உமாதேவியும் சித்திரமண்டபத்தில் வீற்றிருந்தனர். தேவர்கள் கூடி மகிழ்ச் சியுடன் ஆடல்பாடல்களை நிகழ்த் தினர். அவ்வேளையில் உமா தேவி சிவபெருமானிடம் சொக்கட் டான் ஆடலாம் என்றாள். கணங்கள் சொக் கட்டான் பலகையையும் காய்களை யும் கொண்டுவந்தனர்.

அம்பிகை திருமாலை நடுவராக இருக்கும்படி கூறினாள். ஆட்டம் ஆடத் தொடங்கினர். நெடுநேரம் இருவருக்கும் வெற்றி தோல்வியின்றி ஆட்டம் நடந்தது. இறுதி ஆட்டத்தில் சிவபெருமான் வெற்றி பெற்றதாகத் திருமால் கூறினார். அதைக்கேட்டுக் கோபம் கொண்ட உமாதேவியார் அவரை மலைப் பாம்பாகும்படிச் சபித்தார்.

சிவபெருமான் உமாதேவியிடம் உன் கோபம் தேவையற்றது. நீ பசு உருக்கொண்டு பூவுலகம் சென்று அதை வலம் வந்து உரிய வேளை வரும்போது என்னை அடைவாய் என்றார். அம்பிகை அஞ்சிக் கைகூப்பி நின்றாள்.

பிறகு காசிக்கு வந்து பசு உருவா னாள். அங்குப் பசுபதீசுவரர் என்ற லிங்கத்தை அமைத்து வழிபட்டாள். விநாயகர் வழிகாட்டிவர உலகத்தை வலம் வந்தாள். அப் போது அசுரர்களின் கொடுமைக்கு அஞ்சி தேவ மங்கை யர் அம்பிகையைத் தேடிவந்தனர். அவர்களும் பசு வடிவு டன் அவளுடன் சேர்ந்து கொண்டனர். அப்பசுக்கூட்டம் பல தலங்களை வணங்கிய பின் காவிரிக் கரையை அடைந் தது. அங்கு விநாயகர் வழிகாட்ட அரசவனத்தில் அம்பிகை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

★ அணைத்தெழுந்தபிரான் – ஆலிங்கன சந்திரசேகர்

கடுந்தவம் இயற்றினாள். அங்கிருந்த சிவலிங்கத்திற்கு தன் மடிசுரந்த பாலால் திருமஞ்சனமாட்டி வழிபட் டாள். அவருடைய பூசையால் மகிழ்ந்த சிவ பெரு மான் வெளிப்பட்டார்.

சிவபெருமான் அவளுடைய பசு வடிவை நீக்கிப் பழைய தேவ மங்கை வடிவை அளித்தார். அவ்வேளையில் அவளை ஆரத் தழுவி மகிழ்ந் தார். அந்தத் திருக்கோலமே அணைத்தெழுந்த நாதர் என்று அழைக்கப்படுகிறது.

திருஆவடுதுறை எனும் தலம் மயிலாடு துறை-கும்பகோணம் சாலையில் உள்ள திரு ஆலங்காட்டிற்குக் கிழக்கே 2 கி.மீ, தொலைவில் உள்ளது. இங்கு ஊரின் நடுவில் பெரிய குளமும் அதன் மேற்கில் கிழக்கு நோக்கியவாறு பெருந் திருக்கோயிலாக கோமுத்தீசுவரர் ஆலயமும் உள்ளன.

திருவாசகத்தில் கோகழி என்று குறிக்கப் படும் தலம் இதுவேயாகும். இங்கு ஆலயத் தின் உள்ளே அமைந்துள்ள படர் அரசு மரத் தின்கீழ் அமர்ந்து திருமூலர் திருமந்திரத்தை அருளிச் செய்தார் என்பர்.

இந்த ஆலயத்தின் உட்பிராகாரத்தில் அணைத்தெழுந்த பிரானின் தனிச் சந்நிதி தெற்கு நோக்கியவாறு உள்ளது. இது வழக்கமான கோலமாக இல்லாமல் தனிக் கவனத்துடன் செய்யப்பட்ட கலைச் செல்வமாகத் திகழ்கிறது. இதில் பதினான்கு வயதுடையவனாகப் பெரு மான் காட்சியளிக்கிறார். ஏழு வயதுள்ள உமை யவள் மணப்பெண்ணாக அவனருகில் நிற்கின் றாள். இந்த வயதுகளுக்கேற்ப, பெருமான் உயர மாகவும் அம்பிகை உயரம் மிகக் குறைந்த வளாகவும் உள்ளனர். வழக்கமாக அம்பிகை யை மூன்று வளைவுகளுடன் (திரிபங்க நிலையிலும்) சிவனைக் கம்பீரமாக நிமிர்ந்த நிலையிலும் அமைப்பர்.

இங்கு மலைமகள் அறியாப்பெண்ணாக இளம்வயதில் மணம் புரிகிறாள். எனவே, அவள் அச்சத்தாலும் நாணத்தாலும் உண்டாகும் வளைவுகள் நெளிவுகள் இன்றிக் கம்பீரமாக நிமிர்ந்து நிற்கின்றாள். அவளுடைய திருமேனி யில் வளைவுகள் இல்லை. அதற்குப் பதில் அதிக மான உயரங்கொண்ட சிவ பெருமான் அவளது தோளைத் தழுவுவதற்கேற்ப இடுப்பை வளைத்துத் தலையைச் சாய்த்துக் கொண்டுள் ளாள். வலது முன்கை அபயம் காட்ட, இடதுகை அம்பிகையின் தோளில் வைத்து அணைத்துக் கொண்டுள்ளது வலது மேல்கை மழு ஏந்த, இடது கரம் சற்று நீண்டவாறும் அதில் மான் துள்ளிக்கொண்டு உள்ளது.

இப்படி அம்பிகையை அணைத்தருளி அருள் வழங்கும் சிவபெருமானின் கோலம் அணைத்தெழுந்த பிரான் என்றும், ஆலிங்கன சந்திரசேகரர் என்றும் அழைக்கப்படுகின்றன. திருவாவடுதுறையிலுள்ள வடிவம் தனிச் சிறப்பு டன் விளங்குகிறது.

இந்த ஆலயத்தில் ரதசப்தமியைக் கடை நாளாகக் கொண்டு நடைபெறும் தைமாதப் பெருந் திருவிழாவின் பத்தாம் நாளில் இம் மூர்த்தி எழுந்தருளித் தீர்த்தம் வழங்குகிறார்.

இவரைத் திருவிசைப்பாவில் கருவூர்த் தேவர் " " மணவாள நம்பி' என்று குறித்துள்ளார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தழுவிய மகாதேவர்

திருவாவடுதுறையில் பெருமானை அணைத்தெழுந்த நாயகராகக் காண்கிறோம். அதுபோன்றே அம்பிகையைத் தழுவி மகிழ்ந்ததால். தழுவிய மகாதேவர் என அழைக்கப்படுவதை நாகர் கோயிலுக்கு அருகிலுள்ள வடசேரியில் காணலாம்.

குமரி மாவட்டத்தின் ஒருபகுதியான நாஞ்சில் நாட்டில் தாணுலிங்கம், தழுவியலிங்கம், பூதலிங்கம் ஆகிய மூன்றுபெயர்களில் பெருமான் எழுந்தருளியுள்ள ஆலயங்கள் தனிச்சிறப்பைப் பெற்றுள்ளன. தாணுலிங்கம் சுசீந்திரத்திலும், தழுவியலிங்கம் வடசேரியிலும், பூதலிங்கம் பூதப்பாண்டியிலும் உள்ளன.

தழுவிய லிங்கம் குடிகொண்டிருக்கும் வடசேரி புகழ்பெற்ற ஊராகும், நெருக்கடி மிகுந்த சந்தையிலிருந்து ஒரு கி.மீட்டர் தொலைவில் இந்த ஆலயம் அமைந்துள்ளது.

ஒரு சமயம் பராசக்தி இத்தலத்தில் தோன்றி வளர்ந்து வந்தாள். அவளுக்கு ஆவுடை யாள் என்று பெயர் சூட்டி வளர்த்து வந்தனர். அவள் தினமும் இங்குள்ள சிவாலயத் திற்கு வருவது வழக்கம். ஒரு சமயம் அவள் இங்கு வந்து வழிபட்டு நின்றிருக்கும் வேளையில், சிவபெருமான் லிங்கத்திலிருந்து வெளியே வந்தார். ' அவளை அன்புடன் தழுவி மகிழ்ந்தவாறே மறைந்தார். அன்று முதல் இந்த லிங்கம் தழுவிய லிங்கமென்றும் தழுவிய மகாதேவர் என்றும் அழைக்கப்படு கின்றது. அந்தச் சொல்லே மருவி தாடிமார் கோயி லென்று வழங்கு கிறது, ❀

சக்தி முற்றத்துச் சக்தி தழுவிய நாதன்



❀ காஞ்சி அம்பிகை சிவலிங்கத்தைத் தாவி அணைத்துக் கொண்டதாகப் புராணங்கள் கூறினாலும், அந்த அற்புதக் கோலத்தை அங்கு வழிபாட்டில் காண முடியவில்லை. அதைக் காணவேண்டுமானால், நாம் கும்பகோணத்திற்கு அருகிலுள்ள பட்டீச்சரம் செல்ல வேண்டும். சோழர்களின் பெரிய தலைநகரமாக இருந்த பழையாறை இந்நாளில் சிற்றூராக உள்ளது. அது பிரிந்து பட்டீச்சரம், சக்தி முற்றம், முழையூர் எனப் பல பிரிவுகளாக விளங்குகிறது. பட்டீச்சரம் ஆலயம் அங்குள்ள துர்க்கையால் பெரும்புகழ் பெற்றுள்ளது.

அந்த ஆலயத்திற்கு வடக்கில் சக்தி முற்றம் என்னுமிடத்தில் (அடுத்த வீதி) சக்திபுரீசுவரர் ஆலயம் உள்ளது. அதில் பெரிய சந்நிதியில் அம்பிகை லிங்கத்தைத் தாவி அணைத்துக் கொண்டுள்ள பெரிய திருவுருவம் நிலைப்படுத்தப்பட்டுள்ளது. அம்பிகை, தாவி அணைப்பதை உணர்த்த வலது காலை மடித்து லிங்கத்தின் ஆவுடையாரில் ஊன்றி யும், கன்னத்தை லிங்கத்தின் பாணத்தில் அழுத்தியவாறு இருகரங்களாலும் கட்டிப் பிடித்துக் கொண்டிருக்கின்றாள். இத்திருமேனிக்கு நாகபாசமும் கவசமும் அணிவிக்கப்படுள்ளன.

மக்கள் நேர்ந்து கொண்டு பிரார்த்தனைகளைச் செலுத்துகின்றனர். சக்தி அருளிய இடமாதலின் இத்தலம் சக்தி முற்றம் என்று அழைக்கப்படுகிறது. சக்தி பெருமானை அணைத்து முத்தமிட்டதால் சக்தி முத்தம் எனவும் கூறுவர். ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அணைத்தெழுந்து மகிழும் அழகனின் முன்னழகும் பின்னழகும்

சிவபெருமானின் அணைத்தெழுந்த கோலத்தால் மகிழும் அன்பர்கள் பிரதோஷ நாயகராக விளங்கும் பெருமானையும் அணைத்தெழுந்த நாதராகவே அமைத்து வழிபடும் வழக்கத்தை ஏற்படுத்தினர். பல தலங்களில் அணைத்தெழுந்த (ஆலிங்கன) பிரதோஷ மூர்த்தியைக் காண்கிறோம். இங்கு முன்னும் பின்னுமான அவர் அழகைக் கண்டு மகிழலாம்.



❀ இலக்கியங்களில் தெய்வங்கள் தத்தம் தேவியரைத் தழுவி, மகிழ்ச்சியில் திளைப்பதாகவே கூறப்பட்டுள்ளது. வடநாட்டுச் சிற்பங்களில் ஆண்தெய்வங்கள் தமது தேவியரை அணைத்துக் கொண்டிருப்பதைக் காணலாம். தென்னாட்டில் பெரும்பாலும் அந்த நிலையைக் காணமுடியவில்லை. ஆண் தெய்வங்களும் அவற்றின் தேவியரும் தனித்தனியாகவே நின்றவாறோ அமர்ந்தவாறோ காட்சியளிக்கின்றனர். இப்படி அணைத்துக் கொண்டிருப்பது போல் அமைபபது மிகக் குறைந்த அளவிலேயே உள்ளது. கண்ணாடி வண்ணப் படங்கள், தஞ்சாவூர் கலைப் பாணிப் படங்கள் முதலிய பாரம்பர்ய ஓவியங்களில் தெய்வங்கள், தேவியரை அணைத்த கோலங்களிலிருப்பதைக் காணலாம். ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விநாயகனை அருளிய விமலன்

விநாயகர் முழுமுதற் பொருளாக விளங்குகிறார் அவரைப் போற்றி வணங்கிய பின்னரே எல்லோரும் தமது செயலைத் தொடங்குகின்றனர். அவர் தோன்றியதைப் பற்றி வரலாறுகள் பல உள்ளன.

சிவபுராணம் அம்பிகை மஞ்சளைக் குழைத்து அவருடைய திருவுருவத்தைச் செய்து உயிரூட்டினாள் என்கிறது. தேவாரம் சிவபெருமான் ஆண் யானை யாகவும் அம்பிகை பெண் யானையாக வும் வடிவம் கொண்டு சித்திரவனத்தில் உலவிய போது தேவர்களின் வேண்டு கோளை ஏற்று பிரணவ ரூபமான விநாயகப் பெருமானைத் தோற்று வித்தனர் என்று கூறு கிறது.

இன்றும் பல புராணக் கதைகள் விநாயகரின் தோற்றத்தைப் பற்றிப் பலவிதமாகக் கூறு கின்றன. ஒவ்வொரு யுகத்திலும் விநாயகர் அன்பர்களுக்கு அருள்வதற்காக சிவசக்தியரின் குமார னாகத் தோன்றுகிறார். அவ்வாறு தோன் றியதைக் குறிக்கும் தொகுப்பே மேற் காணும் வரலாறுகளாகும்.

விநாயகரின் தோற்றத்தைக் குறிக் கும் அபூர்வ சிற்பமொன்று ஏகாம்ப ரேசுவரர் ஆலயத் தின் முன்புறமுள்ள பதினாறுகால் மண்டபத்தின் தூண் ஒன்றில் சிற்பமாக இடம் பெற்றுள்ளது. இது வேறெங்கும் காணக் கிடைக்காத அற்புத சிற்பமாகும்.

நாகம் என்ற சொல் மலை, பாம்பு, யானை மூன்றையும் குறிக்கும். இந்த மூன்றுமே பார்வதியை மகளாகப்பெற்று மகிழ்ந்துள்ளன. மலைகள் தவம் செய்த போது அம்பிகை அவைகளுக்கு மகளா கத் தோன்றினாள். அதனால் அவளுக்கு அத்திரிஜா (மலை மகள்) என்ற பெயர் வழங்குகிறது.

யானைகள் அவளை வழிபட்ட போதும் யானைகளோடு தொடர்பு டையவரான மதங்கர் வழிபட்டு வேண்டியபோதும் அவள் அவர்களுக்குக் குழந்தையாகப் பிறந்து வளர்ந் தாள். அதனால் அவளுக்கு மாதங்கி என்பது பெயரா யிற்று.



நாக கன்னிகையாக விளங்கும் பார்வதி தேவியிடம் சிவபெருமான் தமது மூலாதார சக்தியிலிருந்து விநாயகப் பெருமானை உண்டாக்கி அளிப்பது
– தூண் சிற்பம் காஞ்சிபுரம்

ஒரு முறை நாகர்கள் அவளைத் தம்மிடம் இருக் குமாறு வேண்டினர். அவளும் உடன் பட்டு அவர்கள் நடுவே பெண்குழந்தையாகத் தோன்றினாள். அவளை நாகவல்லி என்றும் அனந்த கௌரி என்றும் அழைத் தனர். உரிய பருவத்தில் அவளைத் தேடி சிவபெரு மான் மகா நாகேசுவரன் என்னும் கோலத்தில் வந்து, அவளைப் பெண்கேட்டுத் திருமணம் செய்து கொண்டார். அவர்கள் சில காலம் நாகலோகத்தில் வசித்தனர். நாகர்களின் வேண்டு கோளின்படிச் சிவபெருமான் தன் யோக சக்தி யின் மூலாதாரத்திலிருந்து யானை முகமும் கொண்ட வரான விநாயகரைப் படைத்தளித்தார். சிவ பெருமான்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாககன்னிகை யாக விளங்கும் பார்வதியிடம் விநாயகரை மூலாதாரத்திலி ருந்து படைத்த ளிக்கும் கோலமே இச்சிற்பத்தில் இடம் பெற்றுள் ளதாகும்.

விநாயகரைக் கண்டு நாகர்கள் மகிழ்ந்தனர். அவரைத் தமது படத்தில் சுமந்து தாலாட்டி மகிழ்ந்தனர். நீண்ட காலத்திற்குப் பிறகு பார்வதி பரமேசுவரர் நாகலோகத் தவர்களிடம் விடை பெற்றுக் கயிலாயம் அடைந்தனர். அவர்கள் நாகலோகத்திலிருந்து பூமிக்கு கொண்டு வந்துவிட்ட கொடியே நாகவல்லி எனப்படும் வெற்றிலைக் கொடி யாகும். வெற்றிலையில் விநாயகரை அமர்த்தி வழிபடும் வழக்கம் இதனால் உண்டானது.

விநாயகர் பாம்புக் கூட்டங்களுடன் விருப் பமுடன் தங்கியதால் பாம்புப் பிணையல் களுக்கு நடுவே அவரை முதன்மையானவராக அமைக் கின் றனர். பாம்புக் கூட்டங்களுடன் விநாய கரை வழிபடுவர்களுக்கு நல்ல பிள்ளைகள் பிறப்பார்கள் என்பது நம்பிக்கை யாகும். அவரை அனந்த கணபதி என்று அழைக்கின் றனர்.(அனந்தன் - பாம்புகளின் அரசன்)

இறைவன்அனந்தேசுவரனாகவும் அம்பிகை அனந்த கௌரியாகவும் விளங்க அனந்த கணபதி நடுவில் விளங்குகிறார். காஞ்சிபுரம் நாகர்களோடு தொடர்புடைய நகரமாகும். காஞ்சி புரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த தொண்டைமான் இளந்திரையன் நாக கன்னிகை யான பீலிவளைக்கும் சோழமன்னனுக்கும் பிறந்தவன் என்பது பண்டைய வரலாறு கூறும் செய்தி. ஆகவே, நாகர்களால் ஆண்ட இப்பகுதியில் நாகேசு வரின் குமாரனின் சிற்பமும் இடம் பெற்றுள் ளது என்பர்.

நாக வல்லி என்பது திருமணச் சடங்கு களில் ஒன்றாகும். இது சில பிரிவினரிடம் மட்டும் உள்ளது. நீர்க்கரையில் வெற்றிலைக் கொடிகளுக்கு இடையேயுள்ள விநாயகரின் முன்புறம் மணமக்களை அமர்த்திச் செய்யப் படும் சடங்காகும். மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்தில் உள்மதில் கோபுரத்திலுள்ள ஒரு சுதைச் சிற்பம் நாகவல்லி சடங்கினைக் குறிப்பதாக உள்ளது. இதில் அம்பிகையும் சிவ பெரு மானும் நீண்ட பாம்பைக் கொடிபோல் பிடித்துள்ளனர். வாலை அவர்கள் பிடித்தி ருக்க பாம்பு தலைகீழாகத் தொங்குகிறது. அதன் படத்தின் மீது விநாயகர் அமர்ந்துள் ளார். விநாயகரைஅமர்த்திச் சிவபார்வதியர் பாம்புத் தொட்டிலில் தாலாட்டும் இது போன்ற சிற்பம் வேறெங்கும் இல்லாததொன் றாகும்.

காஞ்சிபுரத்தில் விநாயகர் அனந்த கணபதியாக விளங்குவதைப் போலவே முருகப் பெருமானும் அனந்த சுப்பிர மணியராக வீற்றிருக்கிறார். இவர் பாம்போடு தொடர்பு டையவர் என்பதைக் குறிக்க இவரு டைய திருமுடியின் மேல் மூன்று தலை நாகமும் இருபுறமும் உள்ள வள்ளி, தெய்வ யானையரின் திருமுடிமேல் ஒற்றைத் தலைப் பாம்பும் அமைந்துள்ளன. இந்நாளில் இவரை உடுப்பி சுப்பிரமணியர் என அழைக்கின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தமிழர்தம் ஐவகை நிலங்களும் ஆதி சிவனும்

தமிழர்கள் நிலத்தை ஐவகையாகப் பிரித்தனர். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பனவாகும்.

குறிஞ்சி என்பது மலையும் மலையைச் சார்ந்த இடம். இங்கு வசிக்கும் மக்களின் முதன்மைத் தொழில் வேட்டையாடுதல். இவர்களை வேடர் என்று அழைப்பர். விலங்கு களை வேட்டையாடிப் பிடித்துண்பது இவர்கள் தொழிலாகும்.

இக்குலத்தில் தோன்றிய சிவபெருமான் வேடுவனாகக் காட்சியளிக்கிறார். இவரை கிராதன், புலிஞர் வேட்டை சுவாமி என அழைப்பர். இவர் அம்பிகை வேட்டுவச்சியாக உடன்வர, நாய்கள் பின் தொடர , உலா வருகிறார்.

முல்லை என்பது காடும் காட்டைச் சார்ந்த இடமுமாகும். இந்நிலத்து மக்களின் முதன்மைத் தொழில் ஆடுமாடு மேய்த்தல். பசுக்களை இவர்கள் போற்று கின்றனர். இவர்களிடையே பெருமான் பசுபதி யாக விளங்கு கிறார். ஆயர்கள் மூங்கிலைப் போற்றுவர் பெருமான் மூங்கிலில் பிறந்த முத்தாக விளங்குகிறார். இவரை வேய்முத்த நாதர் என அழைப்பர்.

மருதம் என்பது வயலும் வயலைச் சார்ந்த இடம். இங்குள்ள மக்களின் முதன்மைத் தொழில் விவசாயமாகும். இவர்களிடையே பெருமான் வயல் வேலை செய்யும் பணியாளராக இருந்து அருள்புரிகிறார். இக்கோலம் கேதாரீ சுவரர் என்றும் காட்சி கொடுத்த நாயகர் என்றும் போற்றப்படுகிறது. பள்ளனும் பள்ளியுமாக இறைவனும் இறைவியும் தோன்றுவது அற்புதக் காட்சியாகும்,

நான்காவது நிலப்பிரிவான நெய்தல் என்பது கடலும் கடலைச் சார்ந்த இடம். கடற்கரையில் வாழும் மக்களின் முதன்மைத் தொழில் மீன்பிடித்தலாகும். மீனே இவர்கள் உணவுமாகும். இவர்களை மீனவர் என்றழைக்கிறோம். பெருமான் மீனவனாகத் தோன்றிப் பரத வர் குல மங்கையாகப் பிறந்து வளர்ந்த மீனாட் சியை மணந்து கொண்டார். அதனால் அவர் படகோட்டிச் செல்லும் மீனவன் கோலத்தில் அமைத்து வழிபடுகின்றனர். மாணிக்கவாசகர் பெருமானை மீன்வலை விசிய கானவன் என்று அழைப்பார்.

பாலை நிலம் என்று தனியாக தமிழகத்தில் இல்லை. மழை பொய்த்துப் பஞ்சம் தோன்றும் போது, முல்லை நிலமும் குறிஞ்சி நிலமும் தன்வளம் இழந்து பொட்டலாகி நிற்க, அதுவே பாலை நிலம் எனப்படும். அவ்வேளையில் பாலை மரங்கள் மட்டும் துளிர்த்து நிற்கும். பாலை நிலமாகும் போது, மக்களில் சில மனம் திரிந்து ஆறலைக் கள்வராவர். அக்கள்வர்களிலும் மேம்பட்ட கள்வனாகப் பெருமான் தோன்றுவான்.

இறைவனை மகேசனாகத் தோன்றி அருள்பாலிப்பவராக மான், மழு ஏந்தி அபய வரத, முத்திரை தாங்கி நிற்கும் கோலத்தில் அமைத்து வழிபடுவதைப் போலவே, அவன் எளிவந்தவான்கருணையால் மக்களோடு மக்களாக வந்து நின்று, விளையாடி மகிழ்ந்து அருள்புரிந்த கோலங்களையும் அன்பர்கள் அமைத்து வழிபடுகின்றனர். அன்பர்களின் விருப்பப்படி இறைவன் உருவம் தாங்கி வந்தருள்புரிந்ததே நாட்டுப்புற வரலாறுகளாக வரையப்பட்டுள்ளன. ஐவகை நிலங்களில் வாழும் மக்களிடையே தோன்றிச் சிவபெருமான் அருள்பாலித்த கோலங்களை இங்கே கண்டு மகிழலாம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேடனாய் வந்த விகிர்தன்

குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த மக்கள் ஆதியில் வேட்டைத் தொழிலை முதன்மைத் தொழிலாகக் கொண்டிருந்தனர். வேட்டை யாடுவது உண வைத் தருவதுடன் வீரவிளையாட்டாகவும் கருதப்பட்டுள்ளது. அதுவே மக்களுக்குப் பாதுகாப்பையும் அளித்தது. பின்னாளில் கிராமங்கள் வளர்ந்து நாடுகளாகவும், நகரங்க ளாகவும் சாம்ராஜ்யங் களாகவும் விரிந்த போதும் அவற்றை அடையவும் பாதுகாக்கவும் வீரமே துணை நின்றது.

வீரர்களை வேடுவர்களாகச் சித்திரிப்பதே மரபு. அதி உன்னத வீரனான சிவபெருமானை வேடுவனாகப் போற்றுகின்றனர். அவனும் அன்பர்கள் விரும்பிய வண்ணம் பல சமயங்களில் வேடனாகத் தோன்றி அருள்பாலித்தான். அந்த வேடுவக் கோலம் கிராதமூர்த்தி என்று கொண் டாடப் படுகிறது. புலிஞ்சன் எனவும் கூறுவர்.

வேடர் கோலத்தில் விளங்கும் பெருமான் இளைஞனாகக் காட்சியளிக்கிறார். தலை முடியைக் கட்டிக் கொண்டையாக முடிந்துள் ளார். அதில் மயில் இறகுடன் கொக்கிறகுகளைச் சூடியுள்ளார். மார்பில் மான் தோலை அணிந்து, அரையில் புலித்தோலைக் கட்டியுள்ளார். கால்களில் வீரக்கழல்கள் சப்தம் செய்ய, தோலாலான வளைந்த செருப்புகளை அணிந் துள்ளார். காதில் பனை ஓலைக் குழைகளையும், தளிர்களையும் அணிந்துள்ளார். தோளில் நீண்ட வில்லும் வலது பின்புறத் தோளில் அம்புக் கட்டிலும்(அம்பராத் தூளி) உள்ளன. மார்பில் காட்டு மலர்களால் தொடுத்த மாலையும், புலியின் நகங்கள், பற்கள், பன்றியின் பெரும் பற்கள் ஆகியவற்றால் புனைந்த மாலைகளையும் அணிந்துள்ளார்.

❀ திருமுகத்தின் நெருங்கிய தோற்றம்-
குடிமல்லம் - பரசுராம லிங்கேசுவரர்

சிவபெருமானின் மிகத் தொன்மையான வேட்டுவக் கோலத்தினைக் குறிக்கும் சிற்பம் ஆந்திர மாநிலத்திலுள்ள குடிமல்லம் என்ற ஊரில் உள்ளது. இங்கே காட்டில் வேட்டை யாடி வெற்றியுடன் திரும்பும் இளைஞனாகப் பெருமான் காட்சியளிக்கிறார். சிவலிங்கத்தின் நடுவில் தோன்றும் இவர் பூதத்தின் மீது நிற்கின்றார். கால்களில் செருப்புகளை அணிந்துள்ளார். இரு கைகளிலும் வளையல் களை அடுக்காக அணிந்துள்ளார். இடது கையில் நெடிய வில்லைத் தாங்கியுள்ளார். வலது கையில் வேட்டையாடப் பட்ட மலையாடு ஒன்றைத் தலைகீழாகத் தொங்க விட்டுப் பிடித்துள்ளார். தலையிலுள்ள சடை வட்டமாகப் பின்னி முடிக்கப்பட்டுள்ளது. இடையில் மெல்லிய ஆடை அணிந்திருப்பதால், நிர்வாணமாக இருப்பது போன்று தோற்றம் அளிக்கிறது. கலை யுலகின் அற்புதத் திருவுருவமாகப் போற்றப் படும் இவ்வடிவம் 3000 ஆண்டுகள் பழைமை மிக்கது என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின் றனர்.

திருமுறைகளில் சிவபெருமான் வேடர் வடிவுடன் வருவது பல இடங்களில் குறிக்கப் பட்டுள்ளது. இவற்றைத் தொகுத்துக் காணும் போது தலையில் மயிற்பீலி அணிந்துள்ளார். பூத கணங்கள் அவரைச் சூழ்ந்து வருகின்றன. வேதங் கள் வேட்டை நாய்களாகத் தொடர்ந்து வருகின் றன. அவருடன் தேவியும் வேட்டுவச்சியாக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உடன் வருகிறாள். திருஞான சம்பந்தர்

காடிடை கடினாள் கலந்து உடன் சூழ
கண்டவர் வெருவுற விளித்து
வெய்யதாய வேட்டுடைக் கோலம்
விரும்பிய விகிர்தன்

என்று அவரைத் துதிக்கிறார். சிவபெருமான் பெருத்த ஓசை யுடன் ஆரவாரத்துடன் விளித்துக் கொண்டே வருவதாகக் கூறுவது நினைக்கத் தக்கதாம். குறிப்பாகத் திருமுறைகளில் அர்ச் சுனனுக்கு அருள வந்த போது, வேடனாக வந்தது சிறப்பாகவும், விரிவாகவும் கூறப் பட்டுள்ளது.

அர்ச்சுனனுக்கு அருள வந்த வேளையில், கொண்ட வேடர் கோலம் அப்போது அவன் நிகழ்த்திய மல்யுத்தம், பின்பு அவனுக்கு அருள் செய்தது ஆகியவை வில்லி பார தத்தில் மிக விரிவாகக் கூறப்பட்டுள்ளது. அடியவர்கள் வாழ்விலும் அவன் பலமுறை வேடனாகத் தோன்றி ஆடல் புரிந்துள்ளான். அவ்வாறு வந்தனவற்றுள் சுந்தரருக்கு அருள் செய்ததும் ஒரு நிகழ்ச்சியாகும்.

சுந்தரர் சீர்காழியை வணங்கி திருக்குருகா வூரை நோக்கி நடந்தார். அப்போது, கோடைக் காலமாக இருந் தது. பசியாலும் தாகத்தாலும் வருந்தினார். அவருடைய வாட்டத்தைப் போக்கு வதற்குச் சிவபெருமான் ஓர் அந்தணர் வடிவில் தோன்றி, தண்ணீர்ப் பந்தலை அமைத்து அவரை அழைத்து உபசரித்தார். சுந்தரர் அந்தப் பந்தலில் தங்கி நீர் அருந்தி உணவு உண்டு மகிழ்ந்தார். அந்த அசதி யில் உறங்கிவிட்டார். உடன் வந்த வர்களும் ஆழ்ந்து தூங்கி விட்டனர். பெருமான் பந்தலோடு மறைந்து விட்டார்.'

கண்விழித்தெழுந்த சுந்தரரும், அடியவர் களும் நடந்ததை எண்ணி வியந்தனர். குருகாவூர் செல்ல வழி தெரியாது மயங்கினர். அப்போது சிவபெருமான் வேடனா கத் தோன்றி, தான் வழிகாட்டி அழைத்துச் செல்வதாகக் கூறி முன்னே சென்றார். சுந்தரரும் அடியவர்களும் அவரைப் பின்தொடர்ந்தனர். ஆலயத்தை அடைந்ததும் வேடனாக வந்த இறைவன் மறைந்து விட்டார். சுந்தரர் வியப்பு டன் ஆலயத் துள் சென்று பெருமானைப் பாடிப் பரவினார். அதில் பெருமானைக் குருகாவூர் “ வேடனே வெள்ளடை நீயன்றே' என்று துதித்தார்.

புராணங்கள் இப்படி காட்டகத்தே திரி யும் வேடுவனாக பக்கம் பக்கமாக வர்ணித் தாலும் கலைஞர்கள் வில்லம்புடன் மான், மழு ஏந்திய நான்கு கரங்களைக் கொண்டவராகவே அமைத்துள்ளனர். தலையில் இருந்த வட்டணை மாறி சடாமகுடமாகிவிட் டது. குடந்தை கும்பேசுவரர் ஆலயத் தில் கிராத மூர்த்தி எனும் பெயரில் வில்லம்புடன் பெருமான் காட்சியளிக் கிறார். ❀

❀ சிவலிங்கத்தில் தோற்றும் சிவபெருமானின் வேடர் கோலம் - குடிமல்லம்

மலையாள தேசம் முழுவதும் சிவபெருமானை மகாதேவர் என்ற பெயரில் சிவலிங்க வடிவமாகவே அமைத்து வணங்க வேண்டும் என்ற மரபு கடைப்பிடிக்கப்படுகிறது. அவரை உருவமாக வைத்து வழிபட விரும்பினால் வேட வடிவத்தில் மட்டுமே அமைத்து வழிபட வேண்டும் என்று கூறுகின்றனர். அயிராணிக்குளம் எனுமிடத்தில் தனி ஸ்ரீகோயிலில் சிவபெருமானை வேடனாகவும் அம்பிகை வேடுவிச்சியாகவும் அவர்களுடன் குமாரனையும் வைத்து வழிபடுகின்றனர். ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பன்றி வேட்டை (சூரகவேட்டை)

காட்டில் வாழும் விலங்குகளில் காட்டுப் பன்றி, மிகுந்த வீரமுடையது. அதை வேட்டை யாடுவது எளிதல்ல. யானைகள் கூட்டமாக வந்தாலும், தீப்பந்தங்களைக் காட்டி ஓட்டி விடலாம். சிங்கங்களைப் போராடித் துரத்த லாம். புலிகளைப் பயமுறுத்தி ஓட்டலாம். எதற் கும் மசியாது, கடைசி துடிப்பு உள்ள வரை நின்று போராடும் குணம் கொண்ட பன்றியை வெல்வது சுலபமல்ல.

அதன் உடல் அமைப்பும் போரிடுவதற்கேற்ப அமைந்துள்ளது. உறுதியான முகமும் வலிய உடலையும் உறுதியான கால்களும் மிகுந்த வெறியுடன் செயல்படும் குணமும் கொண்டது. அதனால் பன்றி வேட்டையாடி வெற்றி பெறு வது குறிப்பிடத் தக்க பெருமை உடையதாகப் போற்றப்படுகிறது.

சிவபெருமான் பன்றி வேட்டையாடும் வரலாறு பல புராணங்களில் கூறப்பட்டுள்ளது. அருச்சுனனுக்குப் பாசுபதம் அளிக்க வந்த வேளையில், சிவபெருமான் பன்றியைத் துரத்தி வேட்டையாடும் வேடுவனாகவே தோன்று கின்றார். அவர் பன்றி வடிவம் கொண்ட மூகாசுரனைத் துரத்திவந்து அழிப்பதுடன் அருச்சுனனுக்கு பாசுபதம் அளித்து அருள் புரிகிறார்.

மகாலட்சுமியும் பன்றி வடிவான கோலா சுரன் என்பவனை அழித்துக் கோலாசுர பயங்கரி என்ற பெயரைப் பெற்றுள்ளாள்.

ஆகமங்களில் ஆலயத் திருவிழாக்களின் அங்கங்களில் ஒன்றாக வேட்டைத் திருவிழா கூறப்பட்டுள்ளது. குறிப்பாகக் காட்டுப் பன்றியை வேட்டையாடும் திருவிழாவாக இது அமைந்திருப்பதால், இதனைச் சூரகவேட்டைத் திருவிழா என்று அழைத்தனர். அதுவே பல மாறுதல்களைப் பெற்று பாரிவேட்டை என்று பெயரில் நடைபெறுகிறது. ஆதியில் பன்றி வேட்டையாடிய நிலைமாறி இப்போது முயல்வேட்டை அளவுக்குச் சுருங்கி மறைந்து விட்டது.

திருமுறை நூல்களில் பெருமான் பன்றியை வேட்டையாடி அழித்தது கானடைந்த ஏன முந்தில் காரணமாக வந்தது என்று வலம்புரப் பதிகத்திலும், ஏழல்பின் வேடனாய் பாவகம் கொண்டு நின்றது என்று சீர்காழிப் பதிகத்திலும் திருஞானசம்பந்தர் அருளியுள்ளார். திருவிசைப் பாவில் கானில் வரும் முரண் ஏனம் எய்த களி யார் என்று பாடப்பெற்றுள்ளது. கண்ணப்பர் வரலாற்றிலும் அவர் பன்றியை வாளால் வெட்டி வேட்டையர்டியது குறிக்கப் பட்டுள் ளது.

சிவபெருமான் பன்றியை வேட்டையாடி அழித்ததால் பன்றியீசர் என்று அழைக்கப் படு கிறார். பன்றிமலை என்ற பெயரில் பாரதத்தில் பல மலைகள் உள்ளன. மதுரைக்கு அருகில் பன்றிமலை என்னும் பெரிய மலை உள்ளது. தென்னாற்காடு மாவட்டத்தில் செஞ்சியை ஒட்டியுள்ள மலைக்குப் பன்றிமலை என்பது பெயர்அதிலிருந்து ஓடும் காட்டாற்றுக்கு வராக நதி என்ற பெயர் வழங்கு கிறது. (ஏனம், கேழல், வராகம் முதலியவை பன்றியைக் குறிக்கும் சொற்களாகும்) .

❀ பன்றி வேட்டையில் இறந்துபட்ட வீரர் களுக்கு நடுகல் எடுக்கும் வழக்கம் சில இடங் களில் உள்ளது, திருத்தணியை அடுத்த வெளி யகரம் என்னும் ஊருக்கருகில் இத்தகைய நடு கல் ஒன்று உள்ளது. இதில் பாய்ந்துவரும் பன்றி யும் அதனை வாளால் குத்திக் கொல்ல முயலும் வீரனையும் காண்கிறோம்.

❀ கண்ணப்பர் வரலாற்றில் அவர் பன்றியைத் துரத்திக் கொண்டு நெடுங்கானில் செல்வதும் இறுதியில் எதிர்த்து நின்ற பன்றியை வாளால் வெட்டித் துணித்ததும் சேக்கிழார் பெருமா னால் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது இங்கு எண்ணத்தக்கதாகும். ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செண்டலங்காரர்

முல்லை நிலம் என்பது காடும் காட்டைச் சார்ந்த இடமும் ஆகும். இம் மண்ணில் வாழும் மக்களின் தொழில் கால்நடைகளை மேய்த்தல். குறிஞ்சி நிலத் திற்கும் மருத நிலத்திற்கும் இடைப்பட்ட தாக இருந்த முல்லை நிலத்தில் வாழ்வ தால் இங்குள்ள மக்கள் இடையர் என்றும், ஆயர் என்றும் அழைக்கப் படுகின் றனர்.

திருமால், இடையர்களிடம் கண்ண னாகத் தோன்றிவளர்ந்தார். பசுக்களை மேய்த்தார். அதனால் கோபாலன், கோவிந் தன், முதலிய பெயர்களால் அழைக்கப் படுகிறார். ஆயர்பாடி யில் அவர் ஆடிய திருவிளையாடலை இலக்கியங்கள் பல வாறு போற்றி உள்ளன. ஆயர்பாடி யில் அவர் பசு மேய்த்த கோலத்தை அன்பர் கள் இராஜகோபாலன் என்று கொண் டாடுகின்றனர். அதேபோன்ற ஒரு சிவ வடிவம் திருவீழிமிழலையிலும் உள்ளது.

கண்ணனைப்போன்று சிவபெரு மான் ஆயர்களிடையே தோன்றியதாக வரலாறுகள் இல்லை என்றாலும், திரு வீழிமிழலை, குடந்தை, திருமழிசை முதலிய தலங்களிலுள்ள கல்யாண சுந்தரர் வடிவ ங்கள் ஆயனாக வந்து அருள்புரிந்த கோலங்கள் என்றே நினைக்கத் தூண்டு கின் றன.

திருவீழிமிழலையில் உள்ள இவ்வடி வம் மிகப் பெரியதாகவும் அற்புதமாக வும் உள்ளது. இதில் பெருமான் இரண்டு திருக்கரங்களுடன் காட்சியளிக்கின்றார். இடது கையை வளைத்து இடபத்தின் மீது ஊன்றியுள்ளார். வலது கையில் செண்டேந் தியுள்ளார். சடையைப் பின்புறம் சற்றுச் சாய்ந் தவாறு எடுத்துக் கட்டியுள்ளார். முழங் கால் வரையே ஆடை அணிந்துள்ளார். வலப்புறம் தேவி நிற்கின்றாள். பின்னணி யில் இடபம் நிற்கின்றது



மாப்பிள்ளை சாமி-திருவீழிமிழலை

செண்டு ஆயர்களுக்கே உரிய ஆயுத மாகும். உச்சி யில் இரண்டு கொக்கி போன்ற வளைவுகளுடன் கூடிய நீண்டகழியே செண்டாகும். இரண்டு வளைவுகளில் ஒன்று பசுக்கள் ஆடுகள் ஆகியவை தழைகளைத் தின் பதற்கு உதவியாக மரக் கிளைகளை இழுத்துத் தாழ்த்திப் பிடிக்கவும், இன்னொரு வளைவு புதர்களை விலக்க வும், நீண்ட கழிபோன்ற பகுதி காட்டு விலங்கு களை அடித்து ஒட்டவும் உதவுகிறது. செண்டினை ஏந்திருப் பதால் பெருமான் செண்டலங்காரர் என்று அழைக்கப் படுகிறார்.

ஆயர் குலப் பெண்கள் வீரமும் சினமும் உடைய காளையை வளர்ப்பார்கள். அந்தக் காளையை அடக்கும் வீரனையே ஆயர்குலப் பெண் மணப்பாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முல்லை வனத்தில் பெருமான் மகிழ்ச்சி யுடன் விளங்கு கிறார். திருமுருகன் பூண்டியிலும் திருக்கருகாவூரிலும் பெருமான் முறையே மாதவி வனே சுவரர், முல்லைவனநாதர் எனும் பெயர்கள் பூண்டுள்ளார்.

கொல்லேறு தழுவக் கூசுவானை மறுபிறப்பும் புல்லாள் ஆயர் மகள் என்று புறநானூறு கூறு கிறது.

சிவந்த கண்களையும் கூரிய கொம்புகளையும் உடைய காளையை அடக்க முடியாத கோழை யான ஒருவன் அடுத்த பிறவியில் வீரனாக வந்து நின்றாலும், ஆயர் மகள் அவனுக்கு மாலையிட மாட்டாள் என்பது இதன் பொருள்.

சிவபெருமானுடன் காளை நிற்பதும் அவர் செண்டேந்தி நிற்பதும்அவரை ஆயர் குலச் செல்வனாகக் காட்டுகிறது. ஆயர்குலப் பெண் ணா கத் தோன்றிய உமாதேவியை அவள் வளர்த்த காளையை அடக்கித் திருமணம் செய்து கொண்டு பவனி வரும் கோலமே இது என்றும் கூறுவர்.

காலப்போக்கில் கல்யாணசுந்தரர் என்ற பெயர் மட்டும் நிலைத்துவிட்டது. ஆயர் மகளா கத் தோன்றிப் பெருமானை மணந்து கொண்ட வரலாறுகள் மறைந்துவிட்டன என்றாலும், இத்தலத்தில் கூறப்படும் தேவேந்திராணி நமஸ்த் துப்யாம் என்ற தோத்திரம் ருக்மணிதேவி கண்ண பிரானை அடைவதற்குக் கூறிய தோத்திரமாக இருப்பதும் சிந்தித்தற்கு உரியதாகும்.

மேலும், இத்தலத்தில் விளாங்கனி நிவே திக்கப்படுகிறது. தயிர் புளிக்காமல் இருக்க தயிர்க் குடங்களில் விளாங்கனிகளை இட்டு வைப்பது ஆயர்களின் வழக்கமாகும். கண்ண னுக்கு விளாங் கனி பிரியமானது என்பதால், ஓர் அசுரன் பழுத் துக் குலுங்கும் விளா மரத்தின் வடிவுடன் நின்றான். கிருஷ்ணர் நண்பர்களிடம் அந்த மரத்திடம் வாருங்கள். உங்களுக்கு விளாம்பழம் கிடைக்கச் செய்கிறேன் என்று கூறி கன்றுக்குட்டி வடிவுடன் அங்கே திரிந்து கொண்டிருந்த அசுரனைப் பிடித்து எடுத்து விளா மரத்தை அடித்து வீழ்த்தினார். இதனை வில்லிபுத்தூர் ஆழ்வார் " கன்று கொடு விளா வெறிந்த கண்ணன்" என்று பாடியுள்ளார்.

திருவண்ணாமலை தேவாரத்தில் திருஞான சம்பந்தப் பெருமானும் விளாவார் கனி பட நூறிய கண்ணனும் என்று தேவாரத்துள் குறித் துள்ளார்,

திருவீழிமிழலை மாப்பிள்ளை சுவாமி யின் பீடத்தில் விளாங்கனி உருவம் பொறிக்கப் பட் டுள்ளது. பெருமிழலைக் குரும்பர் என்ற அடிய வர் விளாங்கனிகளை நிவேதித்ததாகத் தல புராணம் கூறுகிறது.

குரும்பர் என்பது ஆயர்களின் இனப் பெயர் என்பதும், மிழலை என்பது முல்லை நில ஊர்ப்பெயர் என்பதும் சிந்தனைக்குரியதாகும்

செண்டு

செண்டாயுதம் மிகத் தொன்மையான ஆயுதமாகும். முருகன் மதுரையில் உக்ரகுமாரனாகத் தோன்றி ஆட்சிபுரிந்தபோது, சிவபெருமான் அவருக்கு வேல், வளை ஆகியவற்றுடன் செண்டாயுதத்தையும் அளித்தார் என்றும், அதைக் கொண்டு முருகன் மேருவை அடக்கினார் என்றும், கூறுகின்றனர். காஞ்சி காமகோட்டத்து பெருஞ்சாத்தன் கரிகால் பெருவளத்தான் என்ற சோழ மன்னனுக்கு செண்டாயுதத்தை அளித்தார். அதைக் கொண்டு இமயத்தை அடித்து சோழன் வெற்றி கொண்டான் என்று பழந்தமிழ் நூல்கள் கூறுகின்றன.

பழந்தமிழ்க் கடவுளான சாத்தன் செண்டாயுதம் ஏந்தியுள்ளார். அவரைச் செண்டாடும் ஐயனார் என்று போற்றுகின்றனர்.

இறைவடிவங்களை உலாவரச் செய்யுமும் அவர்களுடைய ஆயுதங்களை முன்னே கொண்டு செல்வது வழக்ககம். திருவீழிமிழலையில் மாப்பிள்ளைசாமி வீதியுலாவிற்காக இருப்பிடத்தை விட்டுப் புறப்படும்போது அவர் கையிலுள்ள செண்டிற்குப் பூசை செய்து அதை முன்னே கொண்டு செல்வது வழக்கம். இதனை செண்டு இறக்குதல் என்று கூறுவர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உழவனாக வந்த ஒளி மழுவாளன்

உலகிலுள்ள தொழில்களில் மிக உயர்ந்தது உணவளிக்க வகைசெய்யும் உழவுத் தொழிலாகும் உலகம் உணவளிக்கும் உழவுத் தொழிலின் செழிப்பினால்தான் இயங்குகிறது என்பதைத் திருவள்ளுவப் பெருந்தகை,

சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை

என்றும், உழுபவர்களை உலகத்திற்கு அச்சாணி என்பதை,

உழுவார் உலகத்திற்கு ஆணி அஃது ஆற்றாது
எழுவரை எல்லாம் பொறுத்து

என்று போற்றுகிறார், எல்லாம் வல்ல சிவபெருமான் உலகைக் காக்கும் தொழிலான உழவைப் போற்றும் வகையில் தானே உழவனாய்த் தோன்றி மண்மீது வந்து ஏரோட்டி, நாற்று நட்டு, களை எடுத்து நீர் பாய்ச்சி, கதிர் அறுத்து, நெற் மணிகளை அட்டி உணவு தானியங்களைக் கோட்டைகளில் சேமித்து வைக்கும் வரை உள்ள அனைத்துப் பணிகளையும் செய்துள்ளான். தேவியும் அவனுடன் உழத்தியாகத் தோன்றி, பண்ணை வேலைகளைச் செய்கிறாள்.

அவன் பணியோ தானியக்கோட்டைகளை அமைப்பதுடன் முடிகிறது. அவளோ உணவு சமைக்கும் அன்னையாகவும் அனைவருக்கும் உணவூட்டி மகிழ்விக்கும் அன்னபூரணியாகவும் விளங்குகிறாள்.

சிவபெருமான் உழவனாகவும், உமாதேவியார் உழத்தியாகவும் தோன்றும் கோலம் காட்சி கொடுத்த நாயகர் என்று அழைக்கப்படுகிறது. இதில் அவருடைய இடபமும் இடம் பெறுகின்றது. இடபம் பயிர்த் தொழிலுக்குத் தோழனாக இருப்பதை இது உணர்த்துகிறது. அவர் மகிழ்ச்சியில் திளைத்திருப்பதன் அடையாளமாகக் காலை சுவஸ்திகமாக வைத்துள்ளார். ஒயிலாக ஒரு கரத்தை இடபத்தின் மீது ஊன்றி மறுகையை இடையின் மீது வைத்துள்ளார். பயிர்த் தொழிலில் நெடு நேரம் குனிந்து வேலை செய்ய வேண்டியிருக்கும். நிமிர்ந்ததும் வலி போக இடுப்பில் கை வைப்பர். அதைக் கருத் தில் கொண்டே சிற்பி இவரை அமைத்துள்ளான். காணற்கரிய ஒப்பற்ற இவ்வடிவம் இப்போது தஞ்சை அருங் காட்சி யகத்தில் உள்ளது,

சிவபெருமான் பல தலங்களில் உழவனாகக் காட்சியளித்ததைப் புராணங்களில் காண் கிறோம். குறிப்பாகச் சுந்தரமூர்த்தி சுவாமி களுக்கு மறைந்திருந்து திருவிளையாடல் புரியக் கருதிய சிவபெருமானும் தேவியும் வயலுக்குச் சென்று அங்குள்ளவர்களுடன் சேர்ந்து வயல் வேலைகளை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பட்டிப்பெருமான் பள்ளனானது

கடுவாள் வழியினை யாரூர்ப்
பரவை கலவிவலைப்
படுவார் தமிழ்ச் சுந்தரர் பாடற் கீயப்
பரிசின்மையால்
நெடுவாளை பாயும் வயலூருபோகி
நெடிய பள்ளன்
வடிவாகி நின்றதும் பேரூச்
சிவன் கொங்கு மண்டலமே

- கொங்கு மண்டலச் சதகம்

நெடிய வாள் போன்ற கண்களை யுடைய பரவையாரின் அன்பு வலையில் பட்டு மகிழும் திருவாரூர் சுந்தர மூர்த்தி சுவாமிகளின் பாட்டிற்குப் பொருள்தர (மனம்) இன்மையால் நீண்ட வாளைகள் பாயும் வயல்நடுவே சென்று உயர்ந்த பள்ளன் வடிவம் கொண்டு, பேரூர்ச் சிவன் நின்றது கொங்கு மண்டலத்திலாகும்.

மேற்கொண்டனர்.

சுந்தரர் பல தலங்களை வணங்கி மகிழ்ந்து கோவையின் (கோயம்புத்தூர்) ஒரு பகுதியாக விளங்கும் பேரூருக்குச் சென்றார்.

அங்கே இருக்கும் பட்டீச்சர ஆலயத்திற்குள் சென்றார். சிவபெருமானையும் உமா தேவியையும் அங்குகாணவில்லை. நந்தியிடம் அவர்கள் எங்கே என்று கேட்டார். நந்திதேவர் பதில் கூறாமல் தலையைத் திருப்பிப் பார்த்தார். சுந்தரர் அதைக் குறிப்பால் உணர்ந்து அவர் பார்த்த திசையின் வழியே சென்றார். அங்கு வயலில் சிவபெருமான் உழவராக மண் வெட்டிப் பிடித்து நீர் பாய்ச்சிக் கொண்டிருக்க, உமாதேவியார் அருகிலுள்ள வேறு வயலில் நாற்று நட்டுக் கொண்டிருந்தாள்.

அவர்களை அறிந்து கொண்டசுந்தரர் மகிழ்ந்தார். பெருமானை நோக்கி,

நட்ட குறை போதும்,
நடாக் குறை நாளை பார்க்கலாம்

என்றார். சிவபெருமான் வயலை விட்டு வெளியே வந்தார் தேவியும் அவரைத் தொடர்ந்து வந்தார். அங்குள்ள வெள்ளியம்பலத்தில் பெருமான் நடனக்காட்சியை அருளினார்.

சுந்தரருக்கு இறைவன் உழவனாக வந்து அருள் செய்த கோலத்தை நினைவூட்டும் வகையில் பேரூரில் பெருமானைக் கேதாரீசுவரர் என்ற பெயரில் ஆலயத்திற்கு முன்னுள்ள பட்டி மேடையின் மீது இடம்பெற்றுள்ள சிறிய ஆலயத்தில் அமைத்துள்ளனர். சிவபெருமான் மண் வெட்டியுடனும் அம்பிகை நாற்றுக் கட்டுடனும் நிற்கின்றனர். இதே போன்று உலாத்திருமேனியும் உள்ளது.

நாற்று நடவுத் திருவிழா என்ற பெயரில் இந்த ஐதீகம் விழாவாகக் கொண்டாடப் படுகிறது.

உழவனாகவும் உழத்தியாகவும் விளங்கும் பெருமானை இடபதேவர் என்ற பெயரில் வேதாரண்யம் வேதபுரீசுவரர் ஆலயத்தில் காண்கிறோம். இதில் பெருமான் சடையை வட்டணையாக முடிந்துள்ளார். அதன் உச்சியில் சிகாமணி உள்ளது.

வலது கரத்தைக் காளையின் முதுகில் ஊன்றி, இடது கையை ஒயிலாக இடையில் வைத்துக் கொண்டுள்ளார். அருகில்தேவி நிற்கிறாள். கல்வெட்டுகள் இவரை இடப தேவர் என்று குறித்துள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இடபதேவரும் – செண்டலங்காரரும்

(காட்சி கொடுத்த நாயகரும் மாப்பிளை சாமியும்)



இடபதேவர் எனப்படும் காட்சி கொடுத்த நாயகர் உழவனின் கோலத்தில் உள்ளார். அவருக்கு இடப்புறம் தேவி நிற்கின்றாள். தலையை வட்டணையாக முடிந்துள்ளார். இடபம் முகத்தை வல்து கைக்கு நேராக வைத்துக் கொண்டு நிற்கின்றது. திருவாரூர், திருவெண்காடு முதலிய தலங்களில் இவரை இவ்வாறு வடித்துள்ளனர்.

செண்டலங்காரம் எனப்படும் மாப்பிள்ளை சாமி கோலத்தில் சிவபெருமான் சடையை எடுத்துக்கட்டி, ஜடாமகுடமாக வைத்துள்ளார். அம்பிகை வலப்புறம் நிற்கிறாள். பெருமான் பின்புறம் சாய்ந்து இடது கையை இடபத்தின் முதுகில் ஊன்றி, வலது கையில் செண்டேந்தியுள்ளார். இது கோவலன் கோலமாகும்.

திருவீழிமிழலை, குடந்தை, பந்தணை நல்லூர் முதலிய தலங்களில் உள்ள கோலங்கள் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். தொடக்கத்தில் இறைவன் மானுடனாக மண்மேல் வந்து மக்களோடு கலந்து வாழ்ந்து, மகிழ்ந்து மகிழ்ச்சியைத் தந்ததன் அடையாளமாகவே அவரை இரண்டு கரங்களுடன் அமைத்தனர். காலப்போக்கில் அந்த உயரிய நோக்கத்தை விட்டுவிட்டு நான்கு கரங்களுடன் பின்கரங்களில் மான், மழு ஏந்தியவராகவும், திருமுடியிலுள்ள சடைகளை எடுத்துக்கட்டிய சடாமகுடம் கொண்டவராகவும் அமைத்தனர். திருமழிசை திருமுல்லைவாயில், அம்பல் முதலிய தலங்களில் நாற்கரம் கொண்டவராகப் பெருமானைக் காண்கிறோம்.

இன்னும் சில இடங்களில் அவர் கரத்திலிருந்த செண்டு, காணாமல் போய்விட்டிருக்கிறது. அதற்குப் பதிலாக அம்பு, சூலம், சந்திரகணை என்று மனம் போன போக்கில் அமைத்துவிட்டனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சுந்தர வேடம்

மார்பளவு உயரமான இடத்தில் வலது அல்லது இடது கையை மடித்து ஊன்றிக் கொண்டு மற்ற கையை இடுப்பில் வைத்துக் கொண்டு நிற்பது மனம் ஓய்வான நிலையில் கவலைகள் அற்று, கடமைகள் முடிந்து நிறைவான மனம் இன்பத்தில் நிலைபெற்றுள்ள நிலையை உணர்த்துவதாகும். பழைய காலத்துப் பெரிய மனிதர்களின் புகைப்படங்களில் கையை உயரமான பூச்சாடி மேடையில் வளைத்து ஊன்றிக் கொண்டு மற்ற கையில் புத்தகத்தை வைத்துக் கொண்டு நிற்கும் நிலையைக் காணலாம்.

இதுவே சுந்தர வேடம் என்று போற்றப் படுகின்றது. இவ்விடத்தில் வேடம் என்பது நிலை பெற்றிருத்தல் என்ற பொருளில் வந்ததாகும். இறைவன் தனக்கு துணை நிற்கும் விடை மீது ஒரு கையை ஊன்றிக் கொண்டு மற்றதை இடையிலோ செண்டேந்தியவாறோ நிற்பதே சுந்தர வேடமாகும்.

சிவபெருமான் விவசாயிக் கோலத்திலும், ஆயன் கோலத்திலும் சுந்தர வேடத்துடன் நிற்கிறார். திருமால் மன்னார் குடியில் இராஜ கோபாலனாக பசுவின் முதுகில் கையை ஊன்றிக் கொண்டு செண்டேந்தி சுந்தர வேடச் செல்வனாக விளங்குகிறார்.

இறைவன் கண்ணாடியில் தோன்றிய தனது உருவத்திற்கு உயிர் அளித்து அழைத்து அணுக்கத் தொண்டனாக ஆக்கிக் கொண்டார். அவருக்கு ஆலால சுந்தரர் என்பது பெயர்.

அவர் இறைவன் ஆணையால் மண் மீது வந்து பிறந்து, இறைவனால் ஆட்கொள்ளப் பட்டுத் தலங்கள்தோறும் சென்ற இறைவனை வழிபட்டுத் தேவாரப் பாடல்கள் அருளிச் செய்தார்.

அவருடைய உருவத்தை அமைத்தவர்கள் இறைவனின் வடிவமாகவே அவரையும் அமைத்தனர். தலையில் கொண்டையை முடிந்தவராக கையில் செண்டேந்தியவராகவே அமைத்தனர். அவர் அருளிய இறுதிப் பதிகத்தில் " "சுந்தர வேடங்களால் துரிசே செய்யும்' ' தொண்டன்' ' என்று குறித்துள்ளார்.

சோழர்கால சுந்தரரைச் சுந்தர வடிவினராக வே காண்கிறோம். பின்னாளில் வந்தவர்கள் செண்டாயுதத்திற்குப்பதில் மலரையும் ஊன்றிய கையின் கீழ் ஊன்றுகோலையும் அமைத் துவிட்டனர்.

அற்புத சுந்தர வேடச் சுந்தரரை அச்சிறுபாக்கம் ஆட்சீசுவரர் ஆலயத்தில் காண்கிறோம்

இராஜகோபாலன் எனப்படும் திருமால் வடிவம் மாப்பிள்ளை சுவாமி எனப்படும் சிவ பெருமானின் வடிவம், சுந்தரம் எனப்படும் ஆலால சுந்தரர் வடிவம் ஆகிய மூன்றும் ஏறத்தாழ ஒரே வடிவானதாகும். இவற்றில் திருமால் மார்பில் ஸ்ரீவத்சம் இருக்கும். சிவ வடிவின் காதுகளில் ஓலைக் குழையும், மகர குண்டலமும் விளங்கும். சுந்தரர் காதுகளில் அகன்ற பெரிய தோடுகள் இருக்கும்.

திருமாலுக்கு சௌந்தரராஜன் என்றும், சிவபெருமானுக்கு சுந்தரபாண்டியர் என்றும், சுந்தரேசுவரர் என்றும் பெயர்கள் வழங்குகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மீன் வலை வீசிய கானவன்

பாரத தேசமும் அதன் தென்பகுதியான தமிழகம் முப்புரமும் கடலால் சூழப்பட்டுள்ள தீபகற்பமாகும். கடல் ஓரத்தில் வசிக்கும் மக்கள் மீன் பிடித்து அதை உண்டு வாழ்வை நடத்து கின்றனர். அவர்களை மீனவர் என்று அழைப்பர். அவர்கள்குலத்தில் பிறந்த பெண்ணாதலால் அம்பிகை மீனயக்ஷி என்று அழைக்கப் படுகிறாள்.

சிவபெருமான் மீனவராகத் தோன்றி, அன் பர்களுக்கு அருள்பாலித்ததைப் பல புராணங்கள் தெரிவிக்கின்றன.அவற்றில் ஒன்று திருவிளை யாடல் புராணத்தில் சிறப்புடன் குறிக்கப் பட்டுள்ளது.

ஒரு முறை ஆலவாயில் வீற்றிருக்கும் சிவபெருமான் அங்கயற்கண்ணி அம்மையா ராகிய பார்வதிதேவிக்கு வேத, சிவாகமங்களின் இரகசியப் பொருளை உபதேசித்துக் கொண்டி ருந்தார். தேவி ஏது காரணத்தாலோ அவர் சொல்லும் பொருளில் கவனம் செலுத்தாமல், அங்கிருந்த குளத்தில் துள்ளிக் குதித்துக் கொண் டிருக்கும் மீன்களைப் பார்த்துக் கொண்டிருந் தாள். இதனால் கோபம் கொண்ட சிவன், தேவி! " " நீ உலகிலுள்ள சாதாரண பெண்களைப் போல் விளையாட்டில் மகிழ்ந்து, வேதப்பொ ருளை உணராது அவமதிக்கின்றாய். ஆதலின் நீ மீன்களைப் பிடித்துண்டு வாழும் மீனவர் குலத்திலே சென்று பிறப்பாய்' என்றார்.

அப்போது தேவி அவரை வணங்கி, நான் உங்களைப் பிரிந்து எங்ஙனம் வாழ்வேன்? என்றாள். அதற்குச்சிவபெருமான்,' நீதென்பாண்டி நாட்டின் கரையிலே உள்ள மீனவ மன்னனுக்கு மகளாகப் பிறந்து சில காலம் வாழ்வாய். உரிய பருவத்தில் வந்து உன்னை யான் மணம் புரிவேன்' என்றார்.

அப்போது அதனைக் கேட்டுக் கொண்டு முருகனும், விநாயகரும் அங்கு வந்தனர். தமது தாயாருக்கு ஏற்பட்ட நிலையைக் கேட்டுக் கோபம் கொண்டனர். விநாயகர், எல்லாம் இந்த புத்தகங்களால் வந்த வினை என்று சொல்லித் தன் துதிக்கையால் அவற்றை யெல்லாம் வாரிக் கடலில் வீசினார். முருகனும் தன் பங்கிற்குச் சிவபிரானுடைய கையில் இருந்த சிவஞான போதச் சுவடியைப் பிடுங்கிக் கடலில் வீசினார்.

இச்செய்கையால் சிவபெருமானுக்குச் சினம் உண்டாயிற்று. அவர் முருகனை நோக்கி, " ஞான நூற்களை இகழ்ந்த நீ வணிகக் குடும் பத்தில் சென்று ஊமையாகப் பிறப்பாய்' என்று பணித்தார்.

பிறகு விநாயகரை நோக்கினார். அவர் புன்சிரிப்புக் காட்டினார். விநாயகரைச் சபிப்பது தன்னையேசபித்துக் கொள்வது போலாகும் என்று சிவபெருமான் அமைதியானார்.

அப்போது நந்திதேவர் அங்குவர, சமயம் அறியாது இவர்களை ஏன் இங்கு விடுத்தாய் என்று கேட்டு, அதன் பயனாக நீ பெரிய சுறா மீனாகிக் கடலில் திரிவாய்' என்றார்.

அதன்படியே ஒவ்வொருவரும் தோன்றி வளர்ந்தனர். பார்வதிதேவியார் மங்கைப் பருவம் அடைந்தாள்.

நந்தியம்பெருமான் கிழக்குக் கடலில் பெரிய சுறா மீனாக வளர்ந்து முன்பு விநாயக ராலும், முருகனாலும் விசி எறியப்பட்ட வேதா கமச் சுவடிகளைத் தலையில் சுமந்தும், சிவ பெருமான் திருவடிகளை நெஞ்சில் சுமந்தும் இன்புற்றிருந்தார் என்றாலும், பிறப்பினால் உண்டான சுறா மீனின் குணம் அவ்வப்போது தலைதூக்கிய காரணத்தால் கடலினைக் கலக்கி யும், தோணிகளையும் மரக்கலங்களையும் உரசியும், உடைத்தும் மகிழ்ந்தார். இப்படி அவர் ஆடிய ஆட்டத்தால் மீன் பிடித்தொழிலே நின்றது. மீனவ அரசன் பலரை அனுப்பியும் அவர்கள் யாராலும் அந்தச் சுறாவினைப் பிடிக்க இயலவில்லை. இறுதியில் இச்சுறாமீனைப் பிடிப்பவனுக்குத் தன் மகளைத் தருவதாகப் பறையறைந்தான்.

அந்நாளில் சோமசுந்தரக் கடவுள் பெரிய வலையைத் தோளில் தாங்கியபடி அவளிடம் வந்து மன்னனே, " அந்தச் சுறாவினை நான் பிடித்துத் தருகிறேன்' என்றார். அவன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அனுமதியளிக்க ஒரு படகேறிச் சென்று வலையை வீசி அந்தச் சுறாமீனைப் பற்றிக் கொண்டு கரைசேர்ந்தார்.

மீனவர் தலைவன் முன்பு தான் சொன்னபடியே தன் மகளை அவருக்குத் திருமணம் செய்து கொடுத்தான். அப்போது அனைவரும் சுயவடி வம் பெற்றனர். சிவபெருமான் அங்கு ள்ள யாவருக்கும் வீடுபேற்றை அருளினார்.

பின்பு, பார்வதிதேவி வேத நூல்களை முழுவதாகக் கேட்க வேண்டும் என்ற ஆவலில், சிவபெருமானிடம் முன்பு சொன்னதைத் தொடர்ந்து, தமக்குக் கூறியருளுமாறு வேண்டினார். அதன் படியே சிவபெருமான் திருப்பெருந்துறை யில் அம்பிகைக்கு எஞ்சிய வேதத்தை உபதேசித்தார்.

அவருடன் நந்தி முதலான அறுபதி னாயிரம் சிவனடியார்களும், சிவயோகிகளும் அருள் ஞான உபதேசம் பெற்றனர். அன்று முதல் அவ்விடம் எஞ்சிய (உத்தர) வேதத்தை (கோசத்தை) அம்பிகைக்கு (மங்கைக்கு) அருளிய சிறப்புடையதால் உத்தரகோச மங்கை எனப் பெயர் பெறுவதாயிற்று. இது தென்பாண்டி நாட்டுத் திருவாசகத் திருத்தல மாகும். திருவாசகம் இவரை மீன் வலை வீசிய கானவன் என்றும், " கேக வேடராகி கெளிறதுபடுத்து" என்றும் கூறுகிறது. (கெளிறு- மீன்)

சிவபெருமான் மீனவனாக வந்து அருள் பாலித்ததைப் போற்றும் வகையில் அவரை மீனவன் கோலத்தில் ஆலயத்தில் எழுந்தருளச் செய்துள்ளனர். சிறப்பு நாட்களில் அவருக்கு விழா நடத்தப்படுகிறது.

தொண்டை நாட்டு கடலோர ஊர்களிலும் ஆற்றோர ஊர்களிலும் வலை வீசிநின்ற வார்சடைச் செல்வனாகச் சிவபெருமான் எழுந்தருளியுள்ளார். இவர் நின்றவாறு வலைவீசும் கோலத்தில் உள்ளார்.

சோழ நாட்டின் கடலோரங்களிலும் காவிரிக் கரையிலுள்ள அநேக ஆலயங்களிலும் வலை வீசும் பெருமான் அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கிறார். மரத்தில் (கட்டுமரம்) ஓடத்தைச் செய்து அதன்மீது உலோகத்தால் இவர் உருவத்தைச் செய்து பொருத்தியுள்ளனர். இவரை மதுரைச் சொக்கர் என்றும் அழைக்கின்றனர். மதுரை சோமசுந்தரப் பெருமானே மீன் பிடித்து திருவிளையாடல் நடத்தியதால் அவர் பெயரால் மதுரைச் சொக்கர் என்று அழைத்தனர். மீனவர்கள் கோயிலோடு அதிகம் தொடர்பு வைத்துக் கொள்ளாததால் இந்த சுவாமி பெயர் மாறி,, இப்போது குதிரைச் சொக்கர் ஆகிவிட்டார்.

இவர் தலையில் கொண்டையிட்டுள்ளார். அதன்மீது ஓலை தலைப்பாகை உள்ளது. இடையில் குத்துவாள் உள்ளது. கைகளில் நீண்ட கோலைப் பிடித்து ஓடத்தைச் செலுத்தும் பாவனையில் உள்ளார்,

வலைவீசி விளையாடும் வார்சடை செல்வன்



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாலையில் வளர் கள்வன்

தமிழ் இலக்கிய பாலை நிலத்து மக்களாக ஆறலைக் கள்வர்களைக் கூறுகின்றன. அவர்கள் வழிப்பபறி செய்து வாழ்பவர்கள். கொலைக்கும் களவுக்கும் அஞ்சாதவர்கள். அவர்களைக் கண்டு மக்கள் அஞ்சினர். அதனால் தனியாகச் செல்லாமல் கூட்டமாகவும் படை வீரர்களுடனும் செல்வதையும் வழக்கமாகக் கொண்டிருந்தனர். குறிஞ்சி நிலத்து வேடர்களில் சில அஞ்சாநெஞ்சினரே ஆறலைக் கள்வர்கள் ஆனார்கள் என்று கூறப்படுகிறது.

இந்த வேடர்களிடம் பொருளைப் பறிகொடுப்பதும் மீட்பதும் ஒரு விழாவாகவே கொண்டாடப் படுகிறது. இதனை வேடர் பறி என்றழைக்கின்றனர்.

சுந்தரரிடம் பெருமான் வழிப்பறிக் கொள்ளையனாகத் திருவிளையாடல் புரிந்து, அவருடைய பாடலைக் கேட்டு அருள் புரிந்துள்ளார். அது, திருமுருகன் பூண்டியில் நிகழ்ந் ததாகும். சுந்தரர் சேரநாடு சென்று சேரமான் பெருமாள் நாயனாரைக் கண்டு மகிழ்ந்து சில நாட்கள் தங்கியிருந்தபின் அவர் அளித்த பெருஞ்செல்வத்துடன் தமிழகம் திரும்பி வந்து கொண்டிருந்தார். அவர் திருமுருகன்பூண்டிக்கு அருகில் வரும் போது சிவபெருமான் திருவிளையாடல் புரியக் கருதினார்.

பூதகணங்களிடம் ஆறலைக் கள்வர்களாக வடிவம் கொண்டு சுந்தரரை வழிமறித்து அவரிடமுள்ள பொருட்களைக் கவர்ந்து வரும்படிக் கூறினார். அதன்படியே பூதங்கள் சென்று சுந்தரரை வழிமறித்து அலைக் கழித்துப் பொருட்களைப் பறித்துக் கொண்டு மறைந்தன.

சுந்தரர், வாடி வருந்தினார். அருகிலிருந்த திருமுருகன்பூண்டி ஆலயத்திற்குச் சென்றார். அங்கிருந்த பெருமானை வணங்கி கள்வர்களின் கொடிய செயல்களால் உண்டான மெலிவை விளக்கும்வண்ணம் என்று தொடங்கிப் பாடினார்.

பாடலுக்கு மகிழ்ந்த சிவபெருமான் புதங்களிடம் பொருள்களைத் தருமாறு கூறினார். அவை ஆலய முற்றத்தில் கவர்ந்த பொருட்களைக் கொண்டு வந்து வைத்தன. அவற்றைக் கண்டு சுந்தரர் மகிழ்ந்தார். பெருமானிடம் விடை பெற்றுக் கொண்டு பயணத்தைத் தொடர்ந்தார்.

திருமுருகன் பூண்டியில் சுந்தரரிடம் பூதங்கள் பொருட்களைக் கவரும் ஐதிக விழா ஆண்டுதோறும் நடத்தப்படுகிறது. இதனை வேடர்பறி என்று அழைக்கின்றனர்.

திருஞான சம்பந்தரிடமும் பெருமான் கள்வனாகத் திருவிளையாடல் புரிந்தான். இங்கே பொருளைத் திருடும் கள்வனாக இல்லாமல் உள்ளத்தைத் திருடும் கள்வனாகி விட்டான். சம்பந்தர் தாம் அருளிய முதற் பதிகத்திலேயே என் உள்ளம் கவர்கள்வன் என்று பாடுவதைக் காண்கிறோம்.

உருத்திரம் எனும் நூல் திருடனும் திருடர்களின் தலைவனுமான உனக்கு நமஸ்காரம் என்கிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாலி வழிபட்ட வள்ளல்

இதிகாசம் கூறும் அரசர்களில் வாலி மிக உயர்ந்தவன். கிஷ்கிந்தை என்னும் நகரைத் தலைநகராகக் கொண்டு வாழ்ந்தவன். சிவபெருமானை மூன்று காலங்களிலும் மூன்று கடலில் நின்று வழிபட்டவன். அவர் அருளால் தன்னை எதிர்த்துப் போருக்கு வருபவனின் பாதி வலிமையைத் தான் பெற்றுக் கொள்பவன். அதனால் அவனை யாராலும் வெல்ல முடியவில்லை,

அவன் வழிபடும் சிவகோலத்தைப் பல ஆலயங்களில் புடைப்புச் சிற்பமாகக் காண் கிறோம். இதில் பெரிய சிவலிங்கத்தையும் குரங்கு முகமும், மனித உடலும், நீண்ட வாலும் கொண்டு அவரைப் பூசிக்கும் வாலி யையும் காண்கிறோம். தலையில் நீண்ட கிரீடத்தை அணிந்துள்ளான். பக்கத்தில் அவனுடைய கதாயுதம் உள்ளது.

தேவாரத்துள் வாலி வழிபட்டதும் அவன் ராவணனை வாலால் கட்டியதும் குறிக்கப் பட்டுள்ளது.

வாலி வழிபட்ட தலங்கள் வாலீச்சரங்கள் என்று அழைக்கப்படுகின்றன. அவற்றில் சிவ பெருமான் வாலீசர் என்ற பெயருடன் வீற்றி ருந்து அருள்பாலிக்கின்றார். இந்நாளில் பாரத் வாஜேஸ்வரர் என்று அழைக்கப்படும் கோடம் பாக்கம் சிவாலயம் புராணத்தில் வாலீசர் என்று அழைக்கப்படுகிறது. சென்னை மயிலாப்பூரில் வாலி வழிபட்ட ஆலயம் வாலீசுவரர் கோயில் என்ற பெயரில் உள்ளது.. கருவறையில் வாலீ சுவரர் என்ற லிங்கமும் அர்த்த மண்டபத்தில் வணங்கி நிற்கும் வாலியையும் காண்கிறோம். இராமகிரி என்னும் ஊரில் வாலீசர் எனும் சிவபெருமானும் அவருக்கு நேர் எதிரில் வழி பட்டு நிற்கும் வாலியையும் காண்கிறோம்.

திருச்சிக்கு அருகில் வாலி கண்டபுரம் என்னும் ஊர் உள்ளது. அங்கு புராதன சிவால யம் உள்ளது.

இராமேசுவரத்திற்கு அருகில் வாலி நோக்கம் என்றும் ஊர் உள்ளது.

வாலி வழிபடுதல்

ஒரு சமயம் இராவணன் தன்னை வெல்ல வல்லவர் யாருமில்லை என்று அகங்காரத்துடன் ஆர்ப்பரித்தான். நாரதர் அவனிடம் வாலி என்ற ஒருவன் இருக்கின்றான். அவன் தன் முன்னே வருபவர்களின் பாதி பலத்தைப் பெற்றுக் கொள்ளும் வரத்தை அடைந்துள்ளான். அதனால் அவனை யாரும் வெல்ல முடியாது என்று கூறினார். உன்னால் முடிந்தால் அவனை வென்றுவிட்டு பராக்கிரமத்தைக் கூறலாம் என்றார்.

இராவணன் எப்படியும் வாலியை வெல்ல வேண்டும் என்று முடிவு செய்தான். அவன் முன்னே சென்றால் தனது பாதி பலம் அவனுக்குச் சென்று விடும் என்பதால், அவனைப் பின்புறமாகச் சென்று கட்டி அணைத்து வீழ்த்த வேண்டும் என்று முடிவு செய்தான். ஓர் நாள் அவனைத் தேடிச் சென் றான். காலை நேரமாக இருந்ததால் வாலி கிழக்குக் கடற்கரையில் அமர்ந்து சிவபூசை செய்து கொண்டிருந்தான். இராவணன் இதுவே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நல்ல சமயமென்று பின்புறத்திலிருந்து அவனைப் பிடிக்க வந்தான். வாலி கண் மூடித் தியானத்தில் இருந்தாலும், அவனுடைய வால் இராவணனைச் சுற்றிப் பிடித்து இறுக்கி விட்டது. மிகுந்த பலத்துடன போராடியும் இராவணனால் வாலியின் வாலிலிருந்து விடுபட முடியவில்லை.

வாலியோ அவனைக் கண்டு கொள்ளா மல் நாள் பூராவும் சுற்றித் திரிந்தான். வாலில் அகப்பட்டுக் கொண்ட இராவணன் மிகுந்த துன்படைந்தான். இறுதியில் தன் அரண் மனைக்குச் சென்ற வாலி தொட்டிலில் விளை யாடிக் கொண்டிருக்கும் தன் குமாரன் அங்க தனிடம் சென்றான். அவனுக்கு விளையாட்டுப் பொருளாக இராவணனை வாலிலிருந்து எடுத்து தொட்டில் மீது கட்டிவிட்டான். பத்து தலை யும், இருபது கரங்களுடன் கூடிய அவனைக் கண்டு அங்கதன் மகிழ்ந்தான்.

இராவணன் வாலியிடம், மன்னிப்பு கேட் டான். வாலி அவனை விடுவித்து நட்புடன் போகவிட்டான். அதுமுதல் இராவணனும் வாலியும் நண்பர்களானார்கள். சில தலங்களில் சிவலிங்க பூசை செய்யும் வாலியையும் அவன் வாலில் சிக்குண்ட கிடக்கும் இராவணனையும் காண்கிறோம்.

குரங்காடு துறை வாலி பூசித்துப் பேறு பெற்ற தலமாகும். அவன் தம்பி சுக்ரீவன் தென் குரங்காடு துறையிலும் மந்திரியான அனுமன் குரக்குக்காவிலும், படைத்தலை வனான நீலன் திருநீலக்குடியிலும் சிவனை பூசித்துப் பேறு பெற்றுள்ளனர் என்று தலபுரா ணங் கள் கூறுகின் றன.

சென்னையில் வாலி வழிபட்ட தலங்கள் சில உள்ளன. மயிலாப்பூரில் உள்ள ஏழு சிவால யங்களில் வாலீச்சரமும் ஒன்றாகும். இங்குக் கரு வறையில் வாலீசுவரப் பெருமான் பெரிய லிங்க வடிவிலும், அர்த்த மண்டபத்தில் அவரைத் தொழுது நிற்கும் கோலத்தில் வாலியின் திரு வுருவமும உள்ளன.

சென்னை கோடம்பாக்ககம் பாரத்து வா ஜேசுவரர் ஆலயக் கல்வெட்டில் பெருமான் வாலீசுவரர் என்று குறிக்கப்படுகிறார். இங்கு இந்நாளில் வாலிக்கு அமைந்திருந்த சந்நிதியில் அனுமான் எழுந்தருளி அருள்பாலிக்கிறார்.

நாகலாபுரத்திற்கு அருகிலுள்ள ராமகிரி என்னும் ஊரில் வாலீசுவரர் ஆலயம் உள்ளது. இங்குக் கருவறையில் உள்ள வாலீசுவரப் பெரு மானுக்கு நேரெதிரில் நந்தியின் பின்புறம் வாலி யின் உருவம் நிலைப்படுத்தப்பட்டுள்ளது. இது போன்று எதிரே நின்று தொழும் வாலியை வேறெங்கும் காண முடியவில்லை.

உருத்திர வாலீச்சரம்

உருத்திர கணத்தில் வாலி எனும் பெயருடன் ஓர் உருத்திரர் உள்ளார். அவர் வழிபட்ட திருத்தலங்கள் உருத்திர வாலீசு வரம் என்று அழைக்கப்படுகின்றன.சிலதலங்களில் இவர் கருவறைக்கு நேராக (பலிபீடத்திற்கு முன்னால்) குரங்கு முகம் கொண்டவராக, மேற்கரங்களில் மான், மழு ஏந்தி முன் கரங்களைக் கூப்பியவாறுள்ளார்.

வாலியின் வாலில் கட்டுண்ட இராவணன்

வாலியின் வாலில் கட்டுண்டு துன்பம் அடைந்த இராவணனைத் திருஞான சம்பந்தர் வடகுரங்காடு துறை தேவாரத்தில் குறித்துள்ளார்.

நீலமாமணி நிறத்தரக்கனை இருபது கரத்தோடொல்க
வாலினால் கட்டிய வாலியார் வழிபட மன்னுகோயில்
ஏலமோடு இலை இலவங்கமே இஞ்சியே மஞ்சளுந்தி
ஆலியா வருபுனல் வடகரை அடை குரங்காடு துறையே

பொருள் ; நீலமணி போன்ற நிறம் கொண்ட அரக்கன் இராவணனை அவனது இருபது தோள்களும் நையுமாறு, தனது வாலால் கட்டிய வாலியார் வழிபடும் சிறந்த கோயில். ஏலம், இலவங்கம், இஞ்சி மஞ்சள் ஆகியவற்றை ஏந்திவரும் வெள்ளத்தை உடைய காவிரியின் வடகரையில் உள்ள குரங்காடுதுறையாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பன்றிக்கு முலையீந்த பரமன்

உலகில் உயர்ந்தது தாயன்பு; தாய் தன் மகவு மீது கொண்ட அன்பே உலகம் தழைக்கக் காரணமாகும். தாய் தனது உதிரத்தையே பாலாக்கித் தன் குழந்தைக்கு ஊட்டுகிறாள். தாய்ப்பாலை ஊட்டும் போதே தனது குலத்தின் பெருமைகளையும் தனது உணர்வுகளையும் அன்பையும், பக்தியையும் கலந்தே ஊட்டுகிறாள். உடலை வளர்க்கும் பால் உள்ளத்தின் செயல்பாடுகளிலும் பங்கு கொள்கிறது. தாய்ப்பால் நோயை எதிர்க்கும் ஆற்றலை உண்டு பண்ணுகிறதென்று மருத்துவ நூல்கள் கூறுகின்றன.

தாயிற் சிறந்த தயாபரனாகிய சிவபெரு மானும் அன்பர்களுக்குப் பல சமயங்களில் பாலூட்டி மகிழ்ந்துள்ளான். சீர்காழியில் பிரம்ம தீர்த்தக் கரையில் அம்மையே அப்பா என்று அழுத திருஞான சம்பந்தப் பெருமானின் குரலைக் கேட்டுப் பெருமான் விடையின் மேல் உமா தேவியுடன் தோன்றினார். அம்பிகையிடம் அவருக்குப் பால் தருமாறு கூறினார். அம்பிகை தனது இரு தனங்களிலும் சுரந்த பாலைப் பொற் கிண்ணத்தில் இட்டு ஞான சம்பந்தருக்கு ஊட்டி னாள். அதை அருந்திய அளவில் அவர் அளவிலாத ஞானம் பெற்றார்.

திருஞான சம்பந்தருக்கு உமையிடம் கூறி, பால் தரும்படிக் கூறியவன் பன்றிக் குட்டிகள் மீதுள்ள கருணையினால் தானே தாய்ப்பன்றி உருவில் சென்று பாலூட்டினான். இந்த வரலாற்றைத் திருவிளையாடற் புராணம் பன்றிக்கு முலையீந்த படலத்தில் விரிவாகக் காணலாம்.

மதுரைக்கு அருகிலிருந்த காட்டில் பெரிய பன்றிக் கூட்டம் இருந்தது. அவற்றிற்குத் தலைவனாக ஒரு பன்றி இருந்தது. அதற்கு ஆற்றல் மிக்க பெண்பன்றி மனைவியாக வாய்த்திருந்தது. அப்பன்றிகள் மிகுந்த சிவபக்தியுடன் திகழ்ந்தன. அவற்றிற்குப் பன்னிரண்டு குட்டி கள் இருந்தன.

ஒரு சமயம் பாண்டியன் அக்காட்டிற்கு வேட்டையாடச் சென்றான். அனேக விலங்குகளை வேட்டையாடிக் கொன்றான். இறுதியில் பன்றிகளையும் கொன்றான். பன்றிக் கூட்டத்தின் தலைமைப் பன்றியான பெரும் பன்றி போருக்கு வந்து உக்கிரமாகப் போரிட்டது. அதைக் கொன்றான். அதையடுத்து அதன்

மதுரை, திருப்பரங்குன்றம் முதலிய ஊர்களிலுள்ள தூண் சிற்பத்தை மாதிரியாகக் கொண்டு வரையப்பட்டது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



இணையான பெண் பன்றியும் போருக்கு வந்தது. நெடும் போராட்டதிற்குப் பின்னர் அதுவும் கொல்லப்பட்டது. அது இறக்கும் போது சோமசுந்தரப் பெருமானே எனது குட்டி களுக்கு அருள் வாய் என்று கூறிக்கொண்டே மாண்டது. நெடுநேரம் தாயைக் காணாது பன்றிக் குட்டிகள் தவித்தன.பசியால் பெருங் குரலெடுத்துஅழுதன.அந்தக் குரல் கேட்ட பெருமான் அவற்றின் தாய்ப்பன்றியாக உருவம் தாங்கிப் பாலூட் டினார்.

அவற்றிற்கு ஞானம் அளித்து மனித வடிவம் அளித்தார்.அவர்கள் தமக்குப் பன்றி முகமே இருக்கட்டும் என்று கூற, அப்படியே பன்றி முகமும் மனித உடலும் கொண்ட வர்களாக அவர்களை மாற்றினார். அப்பன்னிரு வரையும் பாண்டிய மன்னனுக்கு அமைச்சர் களாக் கினார்.

இந்த வரலாற்றை விளக்கும் சிற்பம் சிதம்பரம் திருமாளிகையின் பீடத்தில் சிற்பமாக உள்ளது. இதில் ஒன்றில் பெண் பன்றியின் உருவில் சிவபெருமானையும் அவரிடம் பால் குடிக்கும் பன்றிக்குட்டி களையும் மற்றொன்றில் அந்தக் குட்டிகள் பன்றி முகத்துடன் அமைச்சர்களாக விளங்குவதையும் காண்கிறோம். சில கலைஞர்கள் சிவபெருமானைப் பெண்பன்றி வடிவில் பார்க்காமல் மான், மழு ஏந்தியவாறு பன்றி முகத்துடன் பாலூட்டும் பரமனாகவே கண்டனர். அதைச் சிற்பத்தில் வடித்தனர்.

அத்தகைய சிற்பம் ஒன்று மதுரையிலும் மற்றொன்று திருப்பரங்குன்றம் மகா மண்டபத் தூணிலும் உள்ளன. திருப்பரங் குன்றத்துத் தூண் சிற்பத்தைக் கருத்திற்கொண்டு வரையப்பட்ட ஓவியத்தை இங்குக் காண்கி றோம். முகம் பன்றியின் முகமாக இருந்தாலும் தலையில் கிரீடம் தரித் துள்ளார். மேற்கரங்க ளில் மானும் மழுவும் திகழ்கின்றன. முன்னி ரண்டு கைகளை கீழே நீட்டியுள்ளார். அவற்றில் வரிசையாகப் பக்கத்திற்கு ஆறு குட்டிகள் வீதம் பன்னிரண்டு பன்றிக் குட்டிகளும் உள்ளன.

இது பன்றிக் குட்டிக்கு முலையீந்த வான் கருணை வடிவாகும். திருவாசகத்தில் இது ஏனக்குருளைக்கு (பன்றிக்குட்டிக்கு) அருளி னை போற்றி என்று குறிக்கப்பட்டுள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொக்கு வடிவக் கோமான்

கொக்கு வடிவம் கொண்ட குரண்டன் என்ற அசுரனைச் சிவபெருமான் அழித்து தேவர் களுக்கு அருள்புரிந்தார். அவ்வேளை யில் அவர் கொக்கு வடிவம் தாங்கி அவருடன் போரிட் டார் என்று நாட்டுப்புற வரலாறுகள் கூறுகின் றன.

ஒரு சமயம் மாய அசுரன் ஒருவன் கொக்கு வடிவுடன் கடலிடையே தோன்றி னான். அவன் பிரம்மனை நோக்கி கடுந்தவம் செய்து அரிய பெரிய வரங் களைப் பெற்றான். தேவர் களைத் தம்அலகால் பற்றி வருந்தினான். அவனு டைய தொல்லைகளைப் பொறுக்க முடியாத தேவர்கள் சிவபெரு மானிடம் சென்று முறை யிட்டனர்,

அவர் கடலுக்கு வந்தார். பெரிய கொக்கு வடிவம் தாங்கினார். குரண்டன் அவரைக் கண்டான் ஆர்ப்பரிப்புடன் அவர் மீது பாய்ந் தான். அவனோடு விளையாடு வதற்காகப் பெருமான் போர் புரிந்தார். நீண்ட நேரமாகியும் அவன் சளைக்காமல் போரிட் டான். அவனைப் பெருமான் உக்கிர மயமாகத் தாக்கினார். அவன் இறகுகள் உதிர்ந்தன. அவன் சோர்ந்து வீழ்ந் தான். அவனுக்குப் பெருமான் முத்தி வழங்கி னார். அவனை வென்றதன் அடையாளமாகவும் அவனுடைய நினைவாக வும் உதிர்ந்த இறகு களைத் தன் சடையில் சூடினார்.

திருமுறையில் பல நூறு இடங்களில் பெருமான் கொக்கிற்கு அணிந்திருப்பது குறிக்கப்பட்டுள்ளது, வேதத்திலும் பெருமான் கொக்கு வடிவத்துடன் தோன்றியது குறிக்கப் பட்டுள்ளது.

சிவபெருமான் இன்னொரு முறையும் கொக்கு வடிவம் கொண்டார் என்பதைச் சிவபராக்கிரமம் கூறுகிறது,

ஒரு சமயம் சோமுகன் என்ற அசுரன் பிரம்மனிடமிருந்த வேதங்களைக் கவர்ந்து கொண்டு ஓடிக் கடலில் ஒளிந்து கொண் டான். பிரம்மன் வேதங்கள் இல்லாததால் படைப்புத் தொழிலைச் செய்ய முடியாது சோர்ந்தான். திருமால் பெரிய மீன் வடிவம் கொண்டு கடலுக்குள் சென்றார். சோமுகனைக் கொன்று

கொக்கு வடிவுடன் விளங்கும் சிவபெருமான் அலகில் திருமாலைப் பற்றி யுள்ளார், அருகில் திருமகள் அவரை வணங்குகிறாள்

வேதங்களை மீட்டார். கரையில் நின்றிருந்த பிரம்ம தேவனிடம் வேதங்களை அளித்தார். தேவர்கள் மகிழ்ச்சியால் ஆரவாரம் செய்த துடன் பூமழை பொழிந்தனர்.

திருமால் அதே மீன் வடிவுடன் கடலுக் குள் சென்று விளையாடி மகிழ்ந்தார். அவருள் ளத்தில் இதுபோன்று அசுரர்களை அழிக்கும் வல்லமை என்னை விட யாருக்கு இருக்கிறது இன்று நினைத்தார், அவர் மனதில் அகங்காரம் உண்டானது. அதனால் கடலைக் கலக்கி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விளையாடினார். அவருடைய விளையாட் டால் கடல்வாழ் உயிர்கள் மிகுந்த துன்பம் அடைந்தன, காத்தல் தொழிலும் தடைப்பட்டது.

தேவர்கள் சிவபெருமானிடம் சென்று முறையிட்டனர். சிவபெருமான் கடற்கரைக்கு வந்து திருமாலை அழைத்தார். மீனாகித் திரியும் திருமால் அதைப் பொருட்படுத் தவில்லை. சிவபெருமான் அனைவரும் கண்டு அஞ்சத்தக்க பெரிய கொக்கு வடிவம் எடுத்தார். கடலில் நடந்தார். துள்ளித் திரியும் திருமாலை அலகால் பற்றி எடுத்தார். பெரிய மலையிலிருந்த பாறை மீது அவரை இட்டு உலர்த்தினார்.

திருமால் தேவ வடிவுடன் அவருடன் போரிட வந்தார். சிவன் தேவ வடிவுடன் போரிட்டு அவருடைய கண்களைப் பெயர்த்தார். நீலமணி போன்ற கண்களைத் தனது மோதிரத்தில் பதித்துக் கொண்டார்.

கண்களை இழந்த திருமால் துன்பமடைந்தார். திருமகள் வழிகாட்டக் காஞ்சிக்கு வந்து லிங்கம் அமைத்து வழிபட்டார். அந்த லிங்கம் மச்சேசர் என்ற பெயரில் தனி ஆலயத்தில் உள்ளது.

கொக்கு வடிவம் கொண்ட சிவபெருமானைக் குறிக்கும் அபூர்வ சிற்பம் காஞ்சி ஏகாம்பரேசுவரர் ஆலயத்தின் முன்னுள்ள 16கால் மண்டபத் தூணில் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளது. இதில் கொக்கு வடிவம் கொண்ட மூர்த்திக்கு நான்கு கரங்களும் காட்டப்பட்டுள்ளன. முன்கைகள் அபய வரத முத்திரை காட்ட பின் கரங்களில் மானும் மழுவும் உள்ளன. மார்பில் ஆரங்கள் அணிந்துள்ளார். நீண்ட அலகில் இடுப்பின் கீழ்ப்பகுதி மீனாகவும் மேற்பகுதி தேவவடிவுடன் சங்கு சக்கரம் ஏந்தி கும்பிட்டுக் கொண்டிருக்கும் திருமாலைப் பற்றியுள்ளார்.

இத்தகைய சிற்பத்தை வேறெங்கும் காண முடியவில்லை.

மச்ச யோகீசுவரர்

மச்சயோகீச்வரர்

மீன் மீது யோக நிலையில் அமர்ந்தவாறு காட்சியளிக்கும் சிவபெருமானின் திருவுருவத் தைப் பல தலங்களில் காண்கிறோம் தலையில் முடியை விரிந்த ஜடா மண்டலமாக முடிந்துள்ளார். வலது கையில் செண்டு உள்ளது. வலது காலை மடித்து பீடத்தில் கிடத்தி, இடது காலை குத்திட்டு அமர்ந்துள்ளார். இடது கையைக் குத்தி ட்ட கால் மீது நீட்டியுள்ளார். குத்திட்ட முழங் காலையும் இடுப்பையும் யோக பட்டையம் இணைக்கிறது. ' யோகம் மனம் ஒடுங்கி நிலை பெற்றிருக்கும் அமைதியான சூழலில் நடத்தப்பட வேண்டியது. அத்துடன் அசையாத ஆசனத் தின் மீதிருந்து நடத்தப்படுவது,

ஆனால் இதில் சலனம் மிகுந்த மீன் மீது சிவபெருமான் அமர்ந்து யோகம் புரிவதைக் காண்கிறோம். யோகம் புரிபவர்கள் இவரை வழிபட்டு தம் நெறியில் செல்ல முயன்றால் எல்லா சித்திகளையும் எளிதில் பெறுவர் என்று நம்புகின்றனர். இவரை மீன யோகி எனவும் கூறுகின்றனர்.

மீன் செல்வத்தின் அடையாளமாகும். யோகம் சுகத்தில் நிலைபெற்றிருப்பதன் அடையாளமாகும். மீன் மீது விளங்கும் யோகேசுவரரைக் கண்டு தரிசிப்பதால், நிறைந்த செல்வத்தையும் அதனால் வரும் பயனையும் குறையின்றி அனுபவித்து மகிழலாம் என்று நம்புகின்றனர்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பசுபதி



சிவபெருமானுக்குரிய திருப்பெயர்களில் மிகவுயர்ந்தது. " "பசுபதி' ' என்பதாகும். திருநாவுக்கரசர் பசுபதி திருவிருத்தம் என்ற பதிகத்தை அருளிச் செய்துள்ளார். அனேக தலங்களில் சிவபெருமான் பசுபதீசுவரர் என்ற பெயரில் சிவலிங்கமாக எழுந்தருளியுள்ளார்.

பசுபதி என்ற சொல்லுக்குப் பலவகை யான விளக்கங்கள் உள்ளன. பசு என்பதற்குக் கட்டப்பட்ட, அதாவது வினைகளால் கட்டப்பட்ட உயிர்கள் என்றும் பதி என்பதற்குத் தலைவன் என்றும் சித்தாந்திகள் பொருள் கூறுவர். உயிர்களின் தலைவன் என்பதே பசுபதி யானது என்பர்.

ஆனால், எளிய மக்களின் நாட்டுப்புற நம்பிக்கைகளின்படி, பசுபதி என்பதற்குப் பசுவினால் அறியப் பட்டவன் அல்லது பசுக்களின் தலைவன் அல்லது பசுக்களின் உரிமை உடையவன் என்பது பொருள்.

பசுக்கள் தெய்வீக விலங்காகப் போற்றப் படுகின்றன. அவற்றின் உடலில் சகல தேவர்களும் தேவதைகளும் வசிக்கின்றனர் என்று புராண நூல்கள் கூறுகின்றன. பசுக்களைப் போற்றுவது சிவபுண்ணியம் என்று நம்புகின் றனர். திருமூலர்,

யாவர்க்குமாம் இறைவர்க்கு ஒரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கு வாயுறை ' '

என்று பசுக்களுக்கு உணவு தருவதைக் கூறுகின் றார்.இன்று வரை மக்கள் பசுக்களைப் போற்றி வருதுடன் அவை தாங்கள் வழிபட இறையுருவங்களைக் காட்டிக் கொடுக்கும் என்று நம்புகின்றனர்.

தமிழ்நாட்டிலுள்ள அநேக சுயம்பு வடிவான தெய்வங்களில் பெரும்பாலான வற்றைப் பசுக்களே அறிந்து வெளிப்படுத்தின என்று புராணங்களும் தலபுராணங்களும் கூறுகின் றன.

இதற்கேற்ப வரலாற்றின்படி மிகவும் செழிப்பான ஊர் ஒன்று இருக்கிறது. அதன் அருகில் பெரிய காடு உள்ளது. அது அடர்ந்ததாகவும் வளமானதாகவும் இருந்தது.

மேற்படி ஊரில் பெருஞ்செல்வர் ஒருவர் இருந்தார். அவருடைய வீட்டில் ஏராளமான பசுக்கள் இருந்தன. அவற்றை மேய்க்கப் பல மேய்ப்பர்கள் இருந்தனர். அந்தப் பசுக்க ளைத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தினந்தோறும் காட்டிற்கு ஓட்டிச் சென்று மேய்ப்பது வழக்கம்.

ஒரு சமயம் பசுக் கூட்டத்திலிருந்து ஒரு பசு மட்டும் சரியாகப் பால் கறக்கவில்லை. அதன் காரணத்தை யாராலும் அறிந்து கொள்ள முடியவில்லை. அதன் மடி பெரிய தாக இருந்தது. பசு ஆரோக்யமாக இருந்தது என்றாலும் அது பால் கறக்காததன் காரணத் தைத் தெரிந்து கொள்ள முடியவில்லை.

செல்வந்தர் மேய்ப்பர்களிடம் அந்தப் பசுவைக் கண்காணிக்கும்படி கூறினார். அதன்படியே மேய்ப்பவர்கள் அதன் செயலைக் கண்காணித்தனர்.

உச்சி வேளையானதும் அந்தப் பசு மந்தையிலிருந்து பிரிந்து ஓடியது. காட்டின் நடுவில் இருந்த புற்ஷூடம் சென்று நின்றது. பால் அதன் அடியிலிருந்து தானாகவே வெளிப்பட்டு புற்றில் பொழிந்தது. பசு ஆசையுடன் அப்புற்றை வலம் வந்து மீண்டும் மந்தையில் வந்து கலந்து கொண்டது.

சில நாட்கள் தொடர்ந்து கவனித்தனர். உச்சி வேளையில் அந்தப் பசு மந்தையிலிருந்து பிரிந்து சென்று புற்றில் பாலைப் பொழிந்து விட்டு மீண்டும் மந்தைக்கு வந்து சேர்வது தொடர்ந்தது.

அச்செய்தியை மேய்ப்பவர்கள் தமது தலைவனிடம் சென்று தெரிவித்தனர். அச் செல்வந்தருக்கு அந்தப் புற்றில் தெய்வீக சக்தி இருக்க வேண்டும் என்று தோன்றியது, அதை அறிந்து கொள்ள வேண்டுமென்று ஆவல் பிறந்தது. ஏவலர்களையும் காவலர் களையும் அழைத்துக் கொண்டு பசு பால் பொழிந்து மகிழும் இடத்திற்குச் சென்றார்.

அங்குப் பணியாட்கள் புற்றினை அகழ்ந்தனர். ஒருவர் குத்தியபோது கடப்பாரையின் முனைபட்டு டங் என்ற சத்தத்துடன் குருதி பெருகி வந்தது. அப்போது ஒருவர் மேல் சிவபெருமான் ஆவேசமாகி, தான் அங்கே சுயம்புலிங்கமாக இருப்பதை அருள்வாக்காக வெளிப்படுத்தினார். என்னை வழிபட்டு வாருங்கள், உங்களுக்கு சகல நன்மைகளும் உண்டாகுமென்று கூறினார்.

அதைக் கேட்டு அனைவரும் பரவசம் அடைந்தனர். குடங்குடமாக பாலை ஊற்றிஅந்தப் புற்றைக் கரைத்தனர். அந்த இடத்தைத் தூய் மைப்படுத்தி ஓலைக் கொட்டடகையிட்டு கூரைவேய்ந்து வழிபட்டனர். முறையாகப் பூசைகளைத் தொடர்ந்து நடத்தினர்.

காலப்போக்கில் அங்குக் கோயில் கட்டப்பட்டது. அக்கோயில் பழைய வரலாற்றை நினைவூட்டும் வகையில் புடைப்புச் சிற்பத்தை அமைத்தனர். அதில் பசுமுகத்தைத் திருப்பித் தன்மடியின் கீழ் உள்ள சிவலிங்கத்தை நாவால் நக்கி மகிழ்கிறது. பின்னணியில் மரம் அமைந் துள்ளது

பெரும்பாலும் சிவலிங்கத்தைக் கண்டு பசு பால் பொழிந்ததாகவே வரலாறுகள் கூறு கின்றன. சிற்சில இடங்களில் திருமாலை யும் பசுக்கள் புற்றிலிருந்து வெளிப் படுத்தி யுள்ளன. காரமடையில் சுயம்பு லிங்க வடிவில் விளங்கும் ரங்கநாதர் பசுவால் கண்டறிந்து வெளிப்படுத்தப் பட்டவரேயாவார். சில தலங் களில் அம்பிகையும் பசுவால் வெளிப் பட்டி ருக்கிறாள்.

இத்தகைய வரலாற்றை நினைவூட்டும் வகையில் பசு பால் பொழிந்து லிங்கத்தை வழிபடும் கோலத்தைப் பல இடங்களில் அமைத்துள்ளனர். பெரும்பாலான ஆலயங் களில் இத்தகைய சிற்பத்தைக் காணலாம். கொங்கு மண்ட லத்தில் பசு லிங்கத்திற்குப் பால் சொரிந்து வழிபடும் காட்சி கொங்கு நாட்டில் தனிச்சிறப்புடன் போற்றப்படுகிறது. இதற்குக் காரணம் தெய்வப் பசுவான காமதேனு இம்மண்டலத்தில் செய்த சிவவழிபாடு தனிச் சிறப்பு பெற்றிருப்பதாகும். ஒரு சமயம் விதி வசத்தால் விதியின் கடவுளான பிரம்ம தேவன் தூங்கி விட்டான். அதனால் படைப்புத் தொ ழில் நடைபெறாது போனது. பலவாறு முயன் றும் அவனை எழுப்ப முடியவில்லை. தேவர் கள் காமதேனுவிடம் நீ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

படைப்புத் தொழிலைச் செய்க என்றனர். அது தயங்கி நின்றது.

தேவர்கள் நீ சிவபூசை செய்து படைக் கும் தொழிலைச் செய்வாய் என்றனர். அவர் களிடம் விடைபெற்றுக்கொண்ட காமதேனு பூவுலகிற்கு வந்து அதனை வலம் செய்தபின், கொங்கு நாட்டு வெள்ளியங்கிரியை அடைந்தது. அங்குச் சிவபெருமானை நோக்கித் தவம் செய்தது பின்னர் சிவபூசை செய்யும் விருப்புடன் காஞ்சி யாற்றின்கரையோரமாக வந்து பட்டி அமைத் தது. அதில் பட்டீசராகப் பெருமான் தோன்றி னார். அவர் அருளுடன் காமதேனு புற்றிடம் கொண்ட சிவலிங்கத்தைக் கோவை பட்டீசு வரம் தொடங்கி கருவூர் வரையில் உள்ள முப்பத்திரண்டு இடங்களில் பால் பொழிந்து வழிபட்டது. கருவூரில் இறைவன் பசுபதீசர் என்றும் பேரூரில் பட்டீசர் என்றும் அழைக்கப் படுகின்றனர். (பட்டி - மாட்டு மந்தை)

இறுதியாக வழிபட்ட கருவூரில் இறைவன் பசுபதீசுவரராக அதற்குக் காட்சி யளித்ததுடன் படைப்புத் தொழிலைச்செய்யும் ஆற்றலையும் வழங்கினார். உலகின் படைப்புத் தொழிலுக்குக் கருவாக விளங்கியதால், அவ்வூர் கருவூர் என்று அழைக்கப்படுகிறது. காமதேனு நிலையாகத் தங்கிப் பூசித்ததால், அந்த ஆலயத்திற்கு ஆனி லை என்பதும் பெயராயிற்று. கொங்கு நாட்டில் இந்த 32 சிவாலயங்களையும் போற்றி வழிபடு கின்றனர். இதனைச் சோழன் பூர்வபட்டயம் என்ற நூல் சிறப்புடன் கூறுகிறது.

❀ கொங்கு மண்டலமெங்கும் ஆலயத்தின் முன்னுள்ள தீபஸ்தம்பத்தின் அடிப்பட்டைப் பகுதியில் லிங்கத்திற்குப் பசு பால் பொழியும் பசுபதீசுவரர் சிற்பம் பொறிக்கப்பட்டுள்ளது. இது கொங்கு நாட்டிற்கே உரிய சிற்பமாகப் போற்றப்படுகிறது.

❀தமிழகம் மட்டுமல்ல பாரதத்தின் பல பகுதிகளில் பசுபதீசுவரர் சிற்பம் சிறப்புடன் விளங்குகிறது. நேப்பாளத்தில் பசுபதிநாதர் எனும் பெயரில் பெருமான் சதுர்முக லிங்கமாக வெளிப்பட்டுள்ளார்.

❀பசுக்களில் கருமை நிறம் கொண்டவை சிறப்புடன் போற்றப்படுகின்றன. உடல் முழு வதும் கருநீல நிறத் துடன் இருக்க முகத்தி லும் மடியிலும் வெண்மை நிறம் படர்ந்த பசுக்களை காராம் பசுக்கள் என்பர். இத்தகைய பசுக்களின் பாலைக் கொண்டு சிவலிங்கத்தை வழிபட் டால் எண்ணியதை எண்ணியபடியே அடை யலாம் என்பர்.

❀பசுபதி சிற்பம் மங்கல வடிவமாகும். இது இருக்குமிடம் உணவும் சுகமும் நிறைந் திருக்கும். எனவே அரண்மனைகளிலும் ஆலய முகப்புகளிலும் இதை எழுதி வைக்கும் பழக்கம் உள்ளது. ❀

காமதேனு வழிபட்டது

வீழும் சடையார் பதிபதியீச்சுரர்
வெண்ணெய் மலை
சூழம் புகழொடு தோற்றியநாள்
தொழுது அர்ச்சிக்க நீர்
ஆழும் கடல்புவி அண்டமெல்லாமுற
அண்டர்தொழ
வாழும் பசு உற்பவமானதும்
கொங்கு மண்டலமே



(கங்கை வீழும்) சடையாரான பசுபதீசு வரப் பெருமானைப் பூசை செய்து, கடல் சூழ்ந்த பூமியையும் மற்றுமுள்ள அண்டங்களையும் பிரம்மனைப் போல் படைத்தற் தொழிலைப் பூண்ட காமதேனு பிறந்தது வெண்ணை மலை சூழ்ந்த கருவூர். அது கொங்கு மண்டலத்தில் அமைந் துள்ளதாகும். ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

❀அம்பிகை பசு வடிவம் கொண்டு சிவ லிங்கத்தினைப் பாலூட்டி வழிபட்ட இடம் திரு வாவடுதுறை. இங்குப்பெரிய அளவில் பசுபதி சிற்பம் உள்ளது. திருப்பந்தனை நல்லூர் என்ற தலத்திலும் அம்பிகை பசு வடிவம் கொண்டு இறைவனை வழிபட்டுப் பேறுபெற் றுள்ளார்.

❀காமதேனு என்னும் பசுவின் புதல்வி யரான (கன்றுகளான) பட்டி, விமலி, சபளி, நந்தினி, கொண்டி என்ற ஐந்து பசுக்கள் வழி பட்ட தலங்கள் குடந்தையைச் சுற்றியுள்ளன. பட்டி எனும் பசு பட்டீச்சுரத்தில் பூசை செய்து பேறுபெற்றது. பட்டீசுரம் பழையாறையின் ஒரு பகுதியாக இருந்ததால், பழையாறைப் பட்டீ சுவரம் என்று அழைக்கப்படுகிறது. பழையா றை யின் வடக்கில் அமைந்த வடதளியில் விமலை என்ற பசு பூசித்துப் பேறுபெற்றது. இங்குள்ள அம்பிகை அப்பசுவின் பெயரால் விமலை நாயகி என்றும், இறைவர் வள்ளலார் என்றும் அழைக்கப்படுகின்றனர். பழையாறை மேற்றளி யில் உள்ள கயிலாசநாதர் ஆலயம் சபளி வழிபட் டதாகும். நந்தினி உறையூரிலும், கொண்டி கொண்டீச் சுரத்திலும் வழிபட்டு பேறு பெற்றுள் ளனர். இவை ஐந்திலும் பசு வழிபட்ட காட்சி உள்ளது.

❀ஆலய வழிபாட்டில் இடம்பெற்றுள்ள சிலைகளைப் பெயர்க்கும் போது அதைப் பசு வின் கழுத்தில் கட்டியுள்ள கயிற்றில் இணைத்து இழுத்த பின்னரே பெயர்ப்பது வழக்கம். நமது விருப்பப்படி பெயர்க்கக்கூடாது. அப்படி பெயர்த்தால் தெய்வ குற்றம் உண்டாகிப் பல தொல்லைகளைச் சந்திக்க நேரிடும். பசுக்கள் தெய்வீக சக்தி பெற்றிருப்பதாலும், அவற்றைப் பாவம் அணுகுவதில்லை என்பதாலும், பசுவால் இழுக்கச் செய்து சிலைகளைப் பெயர்த்து வேறி டத்தில் நிலைப்படுத்துகின்றனர். ❀

பசு காட்டிய பரமன்

சுயம்பு லிங்கங்களை மக்களுக்கு வழிபடக் காட்டிக் கொடுத்ததுபோலவே சில சமயம் பசுக்கள் அடியவர்கள் வழி தெரி யாது திகைத்தபோது ஆலயத்திற்கு வழிகாட்டி அழைத்துச் சென் றுள்ளன. சுந்தரமூர்த்தி சுவாமிகள் காஞ்சிபுரத்தி லிருந்து மேற்கே பயணம் செய்தபோது காட்டு வழியே நடந்து வந்தார். அங்கு ஒரு பசு தோன்றி அவருக்கு வழிகாட்டியவாறே வந்து திருப்பனங் காட்டு ஆலயத்தில் மறைந்தது. சுந்தரர் விடை யின்மேல் வருவானை என்று தொடங்கிப் பெருமானை பாடிப் பரவினார்.

பின்னொரு சமயம் சுந்தர மூர்த்தி சுவாமிகள் பாண்டிய நாட்டில் பயணம் செய்து கொண்டி ருந்தபோது, வழிதெரியாது திகைக்க, சிவபெருமான் காளை வடிவில் தோன்றி, வழிகாட்டி வந்து திருக்கானப்பேர் ஆலயத்துள் மறைந்ததாக வரலாறு கூறுகிறது. அங்குள்ள இறைவர் காளையீசர் என்று அழைக்கப் படுகிறார். சுந்தரர் அவரைப் போற்றித் துதித்து கானப்பேருறை காளை என்று பதிகம் பாடியருளினார். இது போன்று பல அடியவர்களுக்கு பசு வடிவிலும் காளை வடிவிலும் இறைவன் தோன்றி அருள் பாலித்ததைக் காண்கிறோம். ❀

சிந்தனைக்கினிய செல்வன் அருளினால் செல்வ நலம் பெற்றுச் சிறப்புடன் வாழ்க! வளர்க!!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நன்றி மலர்கள்

சிவராத்திரி நன்னாளில் மலரும் "சிந்தனைக்கினிய சிவவடிவங்கள்" என்னும் இந்த நூல் விரைவாகவும் சிறப்பாகவும் வெளிவர முன்வெளியீட்டுத் திட்டத்தில் கலந்து கொண்டு பேருதவி புரிந்த கீழ்க்காணும் அன்பர்களுக்கு எங்கள் நன்றி உரித்தாகுக.

சிவஸ்ரீ .T.R. ரமேஷ்
டி சில்வா சாலை, ஆழ்வார்பேட்டை,சென்னை18

'சிவஸ்ரீ Prof.Dr.M.V. சத்தியநாராயணா IIT
தண்டீஸ்வரம், வேளச்சேரி, சென்னை-42

சிவஸ்ரீ .தங்க.சொர்ணகுமார்
டிவிஎஸ் சுந்தரம் பிரேக்ஸ் லைனிங் லிமிடெட்

சிவஸ்ரீ P.B. வெங்கட்ராமன்
ஆஷியானா, ஆழ்வார்பேட்டை, சென்னை-18

தேனுபுரீஸ்வரதாசன், சிவஸ்ரீ திரு.இல. சங்கர்
மாடம்பாக்கம் சென்னை -77

சிவஸ்ரீ A . வெங்கடேசன்
கோரல் மினார், ராஜா அண்ணாமலைபுரம்,செ 28

சிவஸ்ரீ Dr.C.ரவிசங்கர். B.D.S.,
ஜெய்சற்குரு பல் மருத்துவமனை, புதுச்சேரி

குருஜி சிவஸ்ரீ கே.கே. கோபாலசர்மா
பரமேஸ்வரி நகர், அடையாறு, சென்னை-20

சிவஸ்ரீ எஸ். நாராயணசாமி
திரிவேணி அப்பார்ட், கஸ்தூரிபாய் நகர், சென்னை-20

சிவஸ்ரீ V.M.G. ராமன்
கேசவப்பெருமாள் புரம், சென்னை-28

சிவஸ்ரீ. T.K.நீலகண்டன்
அமைந்தகரை, சென்னை

சிவஸ்ரீ Prof.Dr.A.M. சீனிவாசன்
அடையாறு, சென்னை-20

டாக்டர் V.P.R.வரதராஜன் M.B.B.S,
Dr.V.P.ராமபாண்டியராஜ் கிளினிக், சென்னை

சிவஸ்ரீ . R.R.சிவலிங்கம்
சங்கு வியாபாரம், திருவல்லிக்கேணி

சிவஸ்ரீ M. ராஜா
மேனாள் ரிசர்வ் வங்கி அதிகாரி, சென்னை

சிவஸ்ரீ M. சச்சிதானந்தம்
தனலட்சுமி வங்கி, அண்ணாநகர் கிளை, சென்னை

சித்தாந்த ரத்தினம் K. பாஸ்கர்
நூலகர், டாக்டர் உ.வே.சா.நூலகம்

சிவாகமஸ்ரீ. ஞானஸ்கந்த (மூர்த்தி) சிவாச் சாரி யார்
அறுபடைவீடு, பெசன்ட்நகர், சென்னை

சிவஸ்ரீ. B. சுந்தரேசன்
ஆல் இந்தியா ரேடியோ, மயிலாப்பூர், சென்னை-4

சிவஸ்ரீ.L. ஆறுமுகம் B.Sc.,S.I.(Retd)
சென்னை மாநகராட்சி

.சிவஸ்ரீ திருவையாறு வே. ரமணன்
இருப்பு சிதம்பரம்

சிவஸ்ரீ .ஏகாம்பர வேதகிரி
சாந்தி புக் ஹவுஸ், சென்னை-2

சிவஸ்ரீ .N. கார்த்திகேயன்
பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5

திருமதி, பானுமதி மாதவன்
திருவல்லிக்கேணி

,சிவஸ்ரீ V. வெங்கட்ரமணி
கலாச்சேத்திரா காலனி, பெசன்ட்நகர், சென்னை

சிவஸ்ரீ Er.V. ஜெயராம்
எல்லையம்மன் காலனி, சென்னை

சிவஸ்ரீ சாமி சுப்பையா ஸ்தபதியார்குமாரர் சிவஸ்ரீ . சிவா (எ) சுவாமிநாத ஸ்தபதியார்
ஏகாம்பரநாதர் மேற்கு மாடவீதி, காஞ்சிபுரம்

.சிவஸ்ரீ .S. மோகன சம்பத் சிவஸ்ரீ.M. இராஜமகேந்திரன்பெருமாளகரம், திருவேற்காடு

சிவஸ்ரீ விசுவநாத குருக்கள் (காமேஷ்) சிவஸ்ரீபாலச்சந்திர சிவாசாரியார் (சத்திஷ்)
புலியூர், கோடம்பாக்கம், சென்னை - 600 024

In Public domain. Digitization Muthulakshmi Research Academy